31.10.2015

தினமலர்

இன்றைய வேளாண் செய்திகள்

## தமிழகத்தில் மழை தொடரும்



சென்னை: 'காற்று மேலடுக்கு சுழற்சி, கன்னியாகுமரியில் நிலை கொண்டு உள்ளதால், அடுத்த, 24 மணி நேரத்துக்கு தமிழகத்தில் கன மழை பெய்யும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து, மைய இயக்குனர் ரமணன் கூறியதாவது:வங்க கடலில், இலங்கை அருகே, காற்று அழுத்த தாழ்வு பகுதி நீங்கி, காற்று மேலடுக்கு சுழற்சி உருவானது. இது, மேற்கு நோக்கி நகர்ந்து, தற்போது கன்னியாகுமரியில் நிலை கொண்டுள்ளது. எனவே, தமிழகத்தின் அனேக இடங்களில், அடுத்த, 24 மணி நேரத்துக்கு கன மழை பெய்ய வாய்ப்பு

உள்ளது.

அரபி கடலில் உருவாகிஉள்ள, 'சாப்லா' புயல் அதி தீவிரமடையும் வாய்ப்பு உள்ளது. இதனால், ஏமன் உள்ளிட்ட வளைகுடா நாடுகளில் பெரும் மழை பெய்யும். இந்த புயலால், தமிழகத்துக்கு எந்த பாதிப்பும் இல்லை.

இவ்வாறு அவர் கூறினார்.கடந்த, 24 மணி நேரத்தில், நெல்லை மாவட்டம், பாபநாசத்தில் அதிகபட்சமாக, 9 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

காஞ்சிபுரம், சென்னை, ராமநாதபுரம், நாகை, தஞ்சாவூர், திருவாரூர், விழுப்புரம், கடலுார், புதுக்கோட்டை, துாத்துக்குடி, திருவள்ளூர், விருதுநகர், கரூர், திருச்சி மாவட்டங்களில், 1 முதல், 8 செ.மீட்டர் மழை பதிவாகி உள்ளது.

அணைகளுக்கு நீர்வரத்து -திருநெல்வேலி மாவட்டத்தில், சில நாட்களாக, மழை தீவிரமாக பெய்து வருகிறது. இதனால், பாபநாசம், மணிமுத்தாறு அணைகளுக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது. பாபநாசம் அணை, 5.5 டி.எம்.சி., கொள்ளளவு கொண்டது. இதில் தற்போது, 1.7 டி.எம்.சி., நீர் மட்டும் உள்ளது. நேற்று, அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில், 9.3 செ.மீ., மழை பதிவானது. இதனால், அணைக்கு வினாடிக்கு, 1,514 கனஅடி நீர்வரத்து உள்ளது. 30 கனஅடி நீர்அணையில் இருந்து வினாடிக்கு, 205 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது. மணிமுத்தாறு அணை, 5.5 டி.எம்.சி., கொள்ளளவு கொண்டது. இதில் தற்போது, 1.1 டி.எம்.சி., நீர் மட்டுமே இருப்பு உள்ளது. அணையின் நீர்பிடிப்பு பகுதிகளில், 1.3 செ.மீ., மழை பதிவானது. இதனால், அணைக்கு வினாடிக்கு, 236 கனஅடி நீர்வரத்து உள்ளது. அணையில் இருந்து வினாடிக்கு, 30 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

## நாளை குறைந்த விலை துவரை விற்பனை



'தமிழகத்தில், 91 விற்பனை அங்காடிகளில், 1 கிலோ துவரம் பருப்பு, 110 ரூபாய்க்கு விற்பனை செய்யும் திட்டம், நாளை, ஞாயிறு துவங்குகிறது. இதையொட்டி, 'அங்காடி விற்பனையாளர்கள் அனைவரும், நாளை பணிக்கு வர வேண்டும்' என, உத்தரவிடப்பட்டுள்ளது.துவரம் பருப்பு விலை, வெளிச்சந்தையில் அபரிமிதமாக உயர்ந்துள்ளது. விலையேற்றத்தை கட்டுப்படுத்த, மத்திய அரசு வெளிநாட்டில் இருந்து, 5,000 டன் முழு துவரையை, இறக்குமதி செய்தது. அதில், 500 டன், தமிழகத்திற்கு ஒதுக்க வேண்டும் என, முதல்வர் ஜெயலலிதா வேண்டுகோள் விடுத்திருந்தார்.அதை ஏற்று, மத்திய அரசு, 500 டன் துவரையை வழங்கியது. அவை, அரவை ஆலைகளில், துவரம் பருப்பாக மாற்றப்பட்டு, கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகத்தால் நடத்தப்படும், பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம், விற்பனை செய்யப்படும். பாக்கெட்களில் அடைக்கப்பட்டு, 0.5 கிலோ பாக்கெட், 55 ரூபாய்; 1 கிலோ பாக்கெட், 110 ரூபாய் என கொடுக்கப்படும். சென்னையில், 36 கூட்டுறவு பண்டக சாலை, 20 அமுதம் விற்பனை அங்காடி என, மொத்தம், 59 விற்பனை நிலையங்களில், துவரை கிடைக்கும். மதுரையில், 11; திருச்சியில், 14; கோவையில், 10 விற்பனை அங்காடி

என, தமிழகம் முழுவதும், 91 விற்பனை அங்காடிகளில், நவ., 1ம் தேதி முதல் துவரை விற்பனை செய்யப்படும். இது தவிர, ரேஷன் கடைகளில், 1 கிலோ துவரை, 1 கிலோ உளுத்தம் பருப்பு, தலா, 30 ரூபாய்க்கும், 1 லிட்டர் பாமாயில் எண்ணெய், 25 ரூபாய்க்கும் தொடர்ந்து வழங்கப்படும் என, முதல்வர் ஜெயலலிதா அறிவித்தார்.அதன்படி தமிழகத்தில் உள்ள, கூட்டுறவு விற்பனை அங்காடிகளில், குறைந்த விலையில் பருப்பு விற்பனை செய்யும் திட்டம், நாளை துவங்கு கிறது. கூட்டுறவு பண்டக சாலை விற்பனை அங்காடிகளுக்கு, வழக்கமாக ஞாயிற்றுக்கிழமை விடுமுறை நாள். நாளை திட்டத்தை துவக்க வேண்டும் என்பதால், அனைத்து பணியாளர்களும் பணிக்கு வர உத்தரவிடப்பட்டுள்ளது.

## மாற்று வழி கண்ட விவசாயிகள்: விவசாயத்திற்கு சூரியஒளி மின்சாரம்:மின்தடை பிரச்னைக்கு முற்றுப்புள்ளி



ராஜபாளையம்: விருதுநகர் மாவட்டத்தில் மேற்கு தொடர்ச்சி மலையடிவாரத்தில் நெல் விவசாயம் செய்தவர்கள் கூட தண்ணீர் பற்றாக்குறையால் மாற்று விவசாயத்திற்கு மாறியும், மின்தடையால் பல பிரச்னைகளை சந்தித்த இவர்கள், சூரியஒளி மின்சாரம் பயன்பாடுக்கு மாறி வருகின்றனர் .

மேற்கு தொடர்ச்சி மலையில் பெய்யும் மழைநீர் சிற்றாறுகள் மூலம் மலையடிவாரத்திற்கு வருகிறது. அங்கிருந்து ஆறுகள் மூலம் கண்மாய்களில் தண்ணீர் வந்து சேர்கிறது. ஒரு கண்மாய் நிறைந்தவுடன் மற்றவற்றிற்கு தண்ணீர் செல்லும் வரத்து கால்வாய் அமைப்பு இருந்தது. கண்மாய் பாசனத்தில் நெல், கரும்பு, வாழை, மா, பலா உற்பத்தி செய்தனர். தற்போது ஆறுகள் குறுகியது. வரத்து கால்வாய்களும் ஆக்கிரமிப்பில் சிக்கியதால் கண்மாய்களில் தண்ணீர் சேமிக்க முடியவில்லை. கண்மாய்களும் முறையாக தூர்வாராததால் மழையால் கிடைக்கும் தண்ணீரும் வீணாகிறது. கண்மாய் பாசன நிலங்கள் பல இடங்களில் பிளாட்டுகளாக மாறின. சில இடங்களில் கருவேல முள் மரம் வளர்ந்து உள்ளன. இதனால் நெல் விவசாயத்தில் இருந்து மாற்றுமுறை விவசாயத்திற்கு பலர் மாறினர்.தோப்பு அமைத்து மா, தென்னை, வாழை, பலா விவசாயத்தில் ஈடுபட்டனர். இதற்கு குறைந்த அளவு தண்ணீர் தேவை என்பதால் விவசாயிகள் கவலை இல்லாமல் இருந்தனர். கடந்த சில ஆண்டுகளாக இந்த வகை விவசாயத்திற்கு மின்தடை மூலம் ஆபத்து வந்தது. கிணற்று தண்ணீரை மின்மோட்டார் வைத்து சப்ளை செய்யும்போது திடீரென மின்தடை ஏற்படும். கடைசி வரை தண்ணீர் செல்லாததால் கடைகோடியில் உள்ள மரங்கள் வாடின. சொட்டு நீர் பாசனத்தில் விவசாயிகள் ஈடுபட்ட போதும் இது போன்ற பிரச்னையை சந்தித்தனர். இது தவிர மின்தடை ஏற்படும்போது தோப்பில் இருக்கும் விவசாயிகள் நகருக்கு உர மூடை, விவசாயத்திற்கு தேவையான பொருட்கள் வாங்க செல்வர். இதை பயன்படுத்தி மின்மோட்டார் திருட்டு நடந்தது. மின்கம்பத்தில் இருந்து மின்மோட்டாருக்கு வரும் ஒயரை

துண்டித்து கிணற்றுக்குள் இறங்கி மோட்டாரை ஒரு கும்பல் திருடியது. மின்மோட்டார், ஒயர், எலக்ட்ரீசியன் கூலி என பல ஆயிரம் ரூபாய் செலவை விவசாயிகள் சந்தித்தனர். அடிக்கடி ஏற்பட்டதால் விவசாயிகள் நொந்துபோயினர்.

மின்தட்டுப்பாட்டை சமாளித்து விவசாயத்தை காப்பாற்றும் கட்டாயம் விவசாயிகளுக்கு ஏற்பட்டது. இதற்காக தோப்புகளில் சூரியஒளி மூலம் மின்சாரம் உற்பத்தி செய்யும் "பிளான்ட்' அமைக்க துவங்கி உள்ளனர். தோப்பில் இந்த பிளான்ட் அமைத்து கிணற்றில் இருந்து தண்ணீரை தாராளமாக பாய்ச்சுகின்றனர். மின்மோட்டார் அறை அமைத்து அதற்கான மின் தேவையையும், இந்த பிளான்ட் மூலம் பெறுகின்றனர். மின்தடை, குறைந்த மின் சப்ளை போன்ற பிரச்னைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து உள்ளனர். **ராஜபாளையம் பொன்னுச்சாமி,** "" மின்தட்டுப்பாடால் விவசாயம் பாதித்தது. இதற்கான மாற்று ஏற்பாடு குறித்து யோசித்தபோது தான் சுற்றுசூழலுக்கு மாசு ஏற்படுத்தாத சூரிய ஒளி மூலம் மின்சாரம் தயாரிக்க முயற்சி செய்தேன். 80 சதவீத அரசு மானியத்துடன் விவசாய பொறியியல் துறை உதவியுடன் சூரிய ஒளி மின் பிளான்ட் தோப்பில் அமைத்தேன். இதற்காக ஒரு லட்சம் ரூபாய்செலுத்தினால் நான்கு லட்சம் ரூபாய் அரசு மானியமாக கிடைத்தது. வெயில் காலத்தில் தான் கிணறுகளில் தண்ணீர் பற்றாக்குறை ஏற்படும், அப்போது தான் மின்தட்டுப்பாடும் அதிகமாக இருக்கும். இந்த இரண்டையுமே சூரிய ஒளி மின்சக்தியால் எளிதாக சமாளிக்கலாம், " என்றார்.

## அரசின் பரிந்துரை தொகை தீபாவளிக்குள் கிடைக்குமா?கரும்பு விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்ப்பு



கடலூர்: சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே. கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கு கரும்பு வெட்டி அனுப்பிய விவசாயிகள், மாநில அரசின் பரிந்துரை தொகை, வரும் தீபாவளிக்குள் கிடைக்குமா என ஆவலுடன் எதிர்பார்த்து வருகின்றனர். கடலூர் மாவட்டத்தில் பெண்ணாடம் இறையூர், ஏ.சித்தரசூர் மற்றும் நெல்லிக்குப்பம் ஆகிய பகுதிகளில் மூன்று தனியார் சர்க்கரை ஆலைகளும், சேத்தியாத்தோப்பில் எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலை இயங்கி வருகிறது.

அதில் சேத்தியாத்தோப்பு எம்.ஆர்.கே சர்க்கரை ஆலைக்கு சிதம்பரம், காட்டுமன்னார்கோவில் தாலுகா மற்றும் அரியலூர் மாவட்டத்தின் ஒரு பகுதியில் இருந்து 20 ஆயிரம் விவசாயிகள், கரும்பு வெட்டி அனுப்பி வருகின்றனர். ஆண்டுதோறும் டிசம்பர் முதல் மே மாதம் வரை நடைபெறும் அரவைப் பருவத்தில் 2.5 லட்சம் டன் கரும்புகளை அரவைத் திறன் கொண்டது.

கரும்பிற்கு ஆண்டுதோறும் மத்திய அரசு ஆதார விலையை அறிவிக்கும், அதன் பிறகு மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்கும். மத்திய, மாநில அரசுகள் அறிவிக்கும் விலைகளை சேர்த்தே ஆலை நிர்வாகங்கள் விவசாயிகளுக்கு வழங்கி வந்தது. பல்வேறு சிக்கல்கள் காரணமாக

தனியார் ஆலை நிர்வாகங்கள் கடந்த இரண்டு ஆண்டுகளாக மத்திய அரசு அறிவிக்கும் ஆதார விலையை மட்டுமே வழங்கி வருகிறது. மாநில அரசு அறிவித்த பரிந்துரை தொகையைக் கேட்டு போராடி வருகின்றனர்.

ஆனால், அரசின் கட்டுப்பாட்டில் உள்ள எம்.ஆர்.கே., கூட்டுறவு சர்க்கரை ஆலை நிர்வாகம் மட்டும், விவசாயிகளுக்கு மத்திய மற்றும் மாநில அரசு அறிவித்த தொகைகளை சேர்த்தே வழங்கி வந்த நிலையில், கடந்த அரவைப் பருவத்திற்கு கரும்பு வெட்டி அனுப்பிய விவசாயிகளுக்கு, மத்திய அரசு அறிவித்த ஆதார விலையான டன் ஒன்றுக்கு 2,200 ரூபாய் மட்டுமே வழங்கியது.

மாநில அரசு அறிவித்த டன் ஒன்றுக்கு 350 ரூபாய் வீதம் 2.5 லட்சம் டன் கரும்புகளுக்கு 8.75 கோடி ரூபாய் இதுவரை வழங்கப்படவில்லை. அதேப்போன்று லாபத்தில் பங்காக கடந்த 2004-05; 2008-09 ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கு வழங்க வேண்டிய 9 கோடி ரூபாயில், சென்னை ஐகோர்ட் உத்தரவைத் தொடர்ந்து 1.75 கோடி ரூபாய் மட்டுமே வழங்கியது. அதில் மீதமுள்ள 7.5 கோடி ரூபாய் வழங்கப்படவில்லை.

இதுகுறித்து கரும்பு விவசாயிகள், ஆலை நிர்வாகத்திடம் கேட்டபோது, ஆலை நஷ்டத்தில் இயங்குகிறது. இதுகுறித்து அரசுக்கு தெரியப்படுத்தி உள்ளதாகவும், அரசு நிதி ஒதுக்கீடு செய்ததும் வழங்குவதாகவும், அநேகமாக அக்டோபர் மாதம் வழங்கப்படும் என கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் கூறியுள்ளனர். தற்போது அக்டோர் மாதமே முடிந்துவிட்ட நிலையில், எதிர் வரும் தீபாவளி பண்டிகைக்குள்ளாவது நிலுவைத் தொகை கிடைக்குமா என கரும்பு விவசாயிகள் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றனர்.

## துவரம் பருப்பு பதுக்கலை தடுக்க குற்றப்புலனாய்வு போலீசார் ஆய்வு

விழுப்புரம்: துவரம் பருப்பு பதுக்கலை தடுக்க குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை போலீசார் தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர்.

நாடு முழுவதும் துவரம் பருப்பு பதுக்கல் காரணத்தால் பருப்பு விலை அதிகரித்துள்ளது. கடந்த சில தினங்களாக துவரம் பருப்பு பதுக்கல் குறித்து அதிகாரிகள் ஆய்வு நடத்தி வருகின்றனர். இந்நிலையில், விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள மளிகை கடைகள், சேமிப்பு குடோன்களில் விழுப்புரம் குடிமை பொருள் வழங்கல் குற்றப்புலனாய்வு துறை போலீசார், தீவிர சோதனையில் ஈடுபட்டுள்ளனர். விழுப்புரம், கள்ளக்குறிச்சி, திருக்கோவிலூர், திண்டிவனம், செஞ்சி, திருச் சிற்றம்பலம் கூட்ரோடு ஆகிய பகுதிகளில் மளிகை கடைகள், சேமிப்பு குடோன்களில் சப்-இன்ஸ் பெக்டர் பாலமுருகன் தலைமையிலான போலீசார் ஆய்வு செய்தனர். இங்கு, அளவுக்கு அதிகமாக துவரம் பருப்பு உள்ளிட்ட பருப்பு வகைகள் பதுக்கி வைக்கப்பட்டுள்ளதா என ஆய்வு மேற்கொண்டனர்.

**மரவள்ளி விலை நிர்ணய முத்தரப்பு கூட்டம்: தீர்வு ஏற்படாததால் விவசாயிகள் அதிர்ச்சி**

சேலம்: மரவள்ளி கிழங்கு விலை நிர்ணயம் செய்ய, நேற்று, மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் நடந்த, விவசாயிகள், சேகோ ஆலை உரிமையாளர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்ற முத்தரப்பு கூட்டத்தில், தீர்வு ஏற்படாததால், விவசாயிகள் அதிர்ச்சியடைந்தனர்.

சேலம், நாமக்கல், தர்மபுரி, ஈரோடு, விழுப்புரம் உள்பட, 18 மாவட்டங்களில், மரவள்ளிக்கிழங்கு சாகுபடி செய்யப்படுகிறது. தற்போது, மரவள்ளி கிழங்கு அறுவடை துவங்கவுள்ளதால், விலை நிர்ணயம் குறித்து, முத்தரப்பு கூட்டம் நடத்தும்படி, விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர். இந்நிலையில், நேற்று, மாலை, 5 மணியளவில்,

சேலம் கலெக்டர் அலுவலகத்தில், டி.ஆர்.ஓ., செல்வராஜ் தலைமையில், மரவள்ளி விலை நிர்ணயம் குறித்த முத்தரப்பு கூட்டம் நடந்தது. இதில், விவசாயிகள், சேகோ ஆலை உரிமையாளர்கள் மற்றும் அதிகாரிகள் பங்கேற்றனர் 20 லட்சம் பேர்: அப்போது நடந்த விவாதம் வருமாறு:

விவசாயிகள்: மரவள்ளி கிழங்கு, பாயின்ட் அளவில், 300 ரூபாய் வழங்க வேண்டும். பள்ளி சத்துணவு திட்டத்தில், ஜவ்வரிசி உணவு பொருளாக சேர்க்க வேண்டும். 20 லட்சம் விவசாய குடும்பத்தின் ஆதரவு தேவை என்றால், மரவள்ளி மற்றும் சேகோ விலைக்கு மாற்றம் செய்ய, தமிழக அரசு முன்வரவேண்டும்.

சிறு மில்லை நசுக்குகின்றனர்: சேகோ ஆலை உரிமையாளர்கள்: உணவு பாதுகாப்பு துறையின் கெடுபிடியால், சேகோ ஆலைகள் இயக்க முடியாத நிலை உள்ளது. சிலர், நவீன முறை என கூறி, அதிகளவில் மரவள்ளி அரவை செய்து, சிறிய மில்களை ஓடவிடாமல் நசுக்குகின்றனர். வரும், 17ம் தேதி, நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு வருவதால், இந்த வழக்கிற்கு பிறகு தான், சேகோ ஆலை இயக்குவது குறித்து தெரிவிக்க முடியும்.

அதிகளவில் மகசூல்: சேகோ சர்வ் அலுவலர்கள்: சேலம் சேகோ சர்வ் நிறுவனத்தில், 2.50 லட்சம் மூட்டை ஜவ்வரிசி இருப்பு உள்ளது. அதிகளவில் மரவள்ளி கிழங்கு மகசூல் உள்ளதால், ஜவ்வரிசி, ஸ்டார்ச் விலை குறைந்துள்ளது. ஜவ்வரிசி விற்பனை குறைவாக உள்ளதால், விலை வீழ்ச்சி அடைந்துள்ளது. இவ்வாறு, விவாதம் நடந்தது.

தீர்வு ஏற்படவில்லை: இதுகுறித்து, மரவள்ளி விவசாயிகள் கூறியதாவது: மரவள்ளி விலை குறித்த முத்தரப்பு கூட்டத்தில், மாவட்ட கலெக்டர் சம்பத் கலந்து கொள்ளவில்லை. விவசாயிகள், 300 ரூபாய் விலை கேட்டதற்கு, சேகோ ஆலை உரிமையாளர்கள், 260 ரூபாய் விலை தருவதாக கூறியதை, விவசாயிகள் பலர் ஏற்றுக்கொள்ளவில்லை.

மாவட்ட அளவில் நடந்த முத்தரப்பு கூட்டத்தில், எவ்வித தீர்வும் ஏற்படவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.

## மாவட்டத்தில் சீமைக்கருவேலம் மரம் அகற்றுவதற்கு ரூ. 12.50 கோடி தேவை

நாமக்கல்: 'மாவட்டத்தில், சீமை கருவேலம் மரத்தை அகற்ற, 12.50 கோடி ரூபாய் தேவை' என, விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டது.

நாமக்கல் கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில், விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம், கலெக்டர் தட்சிணாமூர்த்தி தலைமையில் நடந்தது. கூட்டத்தில் நடந்த விவாதம் பின்வருமாறு:

கிடப்பில் மின்இணைப்பு: தமிழக விவசாயிகள் சங்க மாநிலச் செயலாளர் சுந்தரம்: விவசாய மின் இணைப்பு கேட்டு, 20 ஆண்டுகளுக்கு முன் விண்ணப்பித்தவர்களின் பெரும்பாலனவர்களுக்கு, இதுவரை இணைப்பு வழங்கவில்லை. கடந்த, ஐந்து ஆண்டுகளாக மின் மோட்டார் வாங்கி காத்திருக்கின்றனர். முன்னுரிமை அடிப்படையில், மின் இணைப்பு கோரி விண்ணப்பித்த விவசாயிகளுக்கு இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ரூ. 4,000 வேண்டும்: தமிழ்நாடு கரும்பு விவசாயிகள் சங்க மாநில துணைத் தலைவர் நல்லாக்கவுண்டர்: நடப்பாண்டு கரும்பு அரவை பருவத்துக்கு, டன் ஒன்றுக்கு, 2,300 ரூபாய் விலையை மத்திய அரசு அறிவித்துள்ளது. ஆண்டுதோறும், அக்டோபர், 1ம் தேதியே ஆதார விலையை மாநில அரசு அறிவித்துவிடும். ஆனால், ஒரு மாதம் ஆகியும் மாநில அரசு, ஆதார விலையை இன்னும் அறிவிக்கவில்லை. கரும்பு விவசாயிகளின நிலையை கருத்தில் கொண்டு, டன் ஒன்றுக்கு, 4,000 ரூபாய் விலை நிர்ணயம் செய்து தமிழக அரசு அறிவிக்க வேண்டும். ஜேடர்பாளையம் பகுதியில் உள்ள வெல்ல உற்பத்தி ஆலைகளில்

சர்க்கரை கலப்பதால், ஆலைகளுக்கு கரும்பு வழங்கும் விவசாயிகள் உரிய விலை கிடைக்காமல் பாதிக்கப்பட்டுள்ளனர். அதனால், சுற்று வட்டாரத்தில் சாகுபடி செய்துள்ள கரும்புகளை, மோகனூர் சர்க்கரை ஆலை எடுத்துக்கொள்ள வேண்டும். ஆனால், டன் ஒன்றுக்கு, 1,900 ரூபாய் மட்டுமே வழங்கப்படும் என கூறப்படுகிறது. மத்திய அரசு நடப்பு அரவை பருவத்துக்கு அறிவித்துள்ள, 2,300 ரூபாயை, டன் ஒன்றுக்கு வழங்க வேண்டும்.ரூ. 1 கோடி வருமானம்: கலெக்டர் தட்சிணாமூர்த்தி: நாமக்கல் மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்கள் உள்ளிட்ட அரசு நிலங்களில் உள்ள சீமைக்கருவேல மரங்களை அகற்ற, 12.50 கோடி ரூபாய் நிதி தேவை. அதன் மூலம், ஒரு கோடி ரூபாய் வருமானம் கிடைக்கும் என, கணக்கிடப்பட்டுள்ளது. தன்னார்வ அமைப்புகள் மூலம், இரண்டு ஏரிகளில் இருந்த சீமைக்கருவேல மரங்கள் அகற்றப்பட்டுள்ளன. சீமைக்கருவேல மரங்களுக்கு அகற்றுவதற்கு ஏலம் விட வேண்டும். அதற்கு காலதாமதமாகும். விவசாயிகள் சார்ந்த கோரிக்கை, உரிய விசாரணை நடத்தி, நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு விவாதம் நடந்தது.

## பேரிடர் மேலாண் பயிற்சி முகாம்

நாமக்கல்: நாமக்கல் மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில், மாவட்ட அளவிலான கருத்தாளர்களுக்கான பேரிடர் மேலாண் பயிற்சி முகாம் நடந்தது. நிறுவன முதல்வர் ஜெயராமன் தலைமை வகித்தார். அதில், பேரிடர் குறித்த விழிப்புணர்வு, மேற்கொள்ளப்படும் நிவாரணப்பணிகளைத் துரிதப்படுத்துதல், வரும் காலங்களில் உயிர் இழப்புகளை முழுமையாகத் தவிர்த்தல் குறித்த செயல்பாடுகளை செயல் விளக்கம் மூலம் செய்து காட்டப்பட்டது. மேலும், பணிகளை செம்மைப்படுத்தி, உயரிய நோக்கத்தில் பள்ளிகளில் பேரிடர் மேலாண் குழு உருவாக்குதல், பேரிடர் மேலாண் குறித்த ஒத்திகையை ஆண்டுக்கு, இரண்டு முறை மேற்கொள்ளுதல் போன்ற

கருத்து விளக்கப்பட்டது. ஆசிரியர் பயிற்சி மாணவ, மாணவியர், விரிவுரையாளர், கருத்தாளர் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணி தீவிரம்: களப்பணியாளர் பார்வையிட கோரிக்கை

கரூர்: கரூர் மாவட்டத்தில், அமராவதி பாசனத்தில், கரூர் மாவட்டத்தில் சின்னதாராபுரம், நஞ்சை காளிகுறிச்சி, பள்ளபாளையம், திருமாநிலையூர், கரூர் பாலம்மாள்புரம், சணப்பிரட்டி, புலியூர், கோயம்பள்ளி, கட்டளை, மணவாசி, மாயனூர் ஆகிய பகுதிகளில் பழைய ஆயக்கட்டு பாசனம் மூலம், 29 ஆயிரத்து, 500 ஏக்கர் பாசன வசதி, காவிரி மாயனூர் தென்கரை வாய்க்கால் பாசனம் மூலம், 15 ஆயிரம் ஏக்கர் பாசன வசதியும் பெறுகின்றன.

நீர்மட்டம் கணிசமாக உயர்வு: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பெய்த மழையின் காரணமாக, மாவட்டம் முழுவதும் நீர்மட்டம் கணிசமாக உயர்ந்துள்ளது. நடவு பணிக்கு தேவையான தண்ணீர் கிடைக்க துவங்கி உள்ளதால், சம்பா சாகுபடி தீவிரமடைந்துள்ளது. சம்பாவில் நெல் நடவு பணி தீவிரமடைந்துள்ளதால், விவசாயிகளின் சந்தேகங்களை நிவர்த்தி செய்யும் வகையில்,வேளாண் களப்பணியாளர்கள் நேரடியாக பார்வையிட வேண்டும், என விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பசுமை புரட்சி இலக்கு: இதுகுறித்து, டெல்டா பாசன விவசாயிகள் சங்க செயல் தலைவர் ராமசாமி கூறியதாவது: பயிர் சாகுபடி தொடர்பான சந்தேகங்களை நீக்கி உரிய முறையில் விளை பொருட்களை சந்தைப்படுத்த, தற்போதுள்ள விரிவாக்க முறையினை முறைபடுத்த அரசு நடவடிக்கை எடுத்துள்ளது. இரண்டாம் பசுமை புரட்சியின் இலக்கான இடமடங்கு உற்பத்தி, மும்மடங்கு வருமானம் என்ற குறிக்கோளினை அடையும் வகையில், விவசாயிகளின் கிராமங்களுக்கு

களப்பணியாளர்கள் சென்று வேளாண் மற்றும் தோட்டக்கலைப் பயிர்கள் சம்பந்தமான தொழில்நுட்ப செய்திகளை வழங்க வேண்டும். பயிரின் ஒவ்வொரு வளர்ச்சி கட்டத்திலும் ஏற்படும் பூச்சி மற்றும் நோய்களை கட்டுப்படுத்திட, பயிர்பாதுகாப்பு ஆலோசனை வழங்க வேண்டும். பருவத்துக்கு ஏற்றபடி சாகுபடி செய்யும் பயிர்களில் கடைப்பிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களை செயல்முறையை, குழுவினர் செய்து காண்பிக்க வேண்டும்.

தொழில்நுட்ப ஆலோசனை தேவை: விவசாயிகளின் விளைபொருளை சந்தைப்படுத்துதல் குறித்த ஆலோசனை வழங்கப்படும் என்பது தமிழக அரசின் உத்தரவு. உத்தரவுப்படி, கிராமங்களுக்கு களப்பணியாளர்கள் வந்து, 10 முதல், 20 விவசாயிகளை அழைத்து பயிற்சி மட்டும் வழங்குகின்றனர். சம்பா சாகுபடி தீவிரமடைந்துள்ளதால், நெல் வயல்களுக்கு நேரடியாக வந்து, தொழில்நுட்பம், நோய் தடுப்பு போன்றவை வயல்களில் செயல்முறை செய்து காட்ட வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

### மேரக்காய் விவசாயத்தில் ஆர்வம் விலையும் கிடைத்தால் லாபம்

மஞ்சூர் : மஞ்சூர் பகுதிகளில் சிறு விவசாயிகள், மேரக்காய் விவசாயத்தில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

மஞ்சூர் பகுதிகளில் தேயிலை விவசாயம் பிரதான தொழிலாக மேற்கொள்ளப்பட்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளாக, தேயிலை போதிய விலை கிடைக்காததால், சிறு விவசாயிகள் அத்தியாவசிய தேவையை கூட பூர்த்தி செய்ய முடியாமல் அவதியடைந்து வருகின்றனர். இதனால், மஞ்சூர் பகுதிகளில், 2000 ஏக்கர் தேயிலை தோட்டங்களில் ஊடுபயிராக மேரக்காய், மலை காய்கறிகள் பயிரிடப்பட்டுள்ளது.

அதிலும், விவசாயத்தில் செலவு குறைவாகவும், சந்தையில் அதிக விலை கிடைக்கும் மேரக்காய் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். மஞ்சூர், கைக்காட்டி, சேலாஸ், கெந்தளா உள்ளிட்ட சுற்றுவட்டார பகுதியில், 1000 ஏக்கர் அளவுக்கு தேயிலை தோட்டங்களிலும், மேரக்காய் பயிரிட்டுள்ளனர். விவசாயி, குமார் கூறுகையில்,"மேரக்காய்க்கு சந்தையில் அதிகபட்சம் கிலோவுக்கு, 20 ரூபாய், கிடைத்து வருவதால், ஒரளவு ஆறுதல் கிடைத்துள்ளது," என்றார்.

### ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம்: நகருக்குள் அமைக்க டி.ஆர்.ஓ.,விடம் மனு

ஈரோடு: சென்னிமலையில் ஒருங்கிணைந்த வேளாண் விரிவாக்க மையம் அமைக்க, தமிழக அரசு, 1.50 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்துள்ளது. இப்போது, வேளாண் விரிவாக்க மையம் சென்னிமலை யூனியன் அலுவலகத்தில், சிறிய கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. புதிய மையத்தை, நகர் பகுதியில் அமைக்க, கோரிக்கை எழுந்துள்ளது. சென்னிமலையில் இருந்து சுமார் அரை கிலோ மீட்டர் தொலைவில் உள்ள உப்பிலிபாளையம் ரோடு, காமராஜ் நகரில், அரசுக்கு சொந்தமான இடத்தில் மையத்தை அமைக்க விவசாயிகள் ஆவல் தெரிவித்துள்ளனர். ஆனால், இதற்கு சிலர் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். இந்நிலையில், தமிழ்நாடு தற்சார்பு விவசாயிகள் சங்க தலைவர் பொன்னையன், ஈரோடு டி.ஆர்.ஓ., சதீஷிடம், ஒரு மனு கொடுத்துள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: சென்னிமலை பகுதி, விவசாயம் சார்ந்த பகுதி. அதிக அளவிலான விவசாயிகள், இம்மையத்துக்கு வந்து செல்ல வசதியாக, நகரப்பகுதியில் மையத்தை அமைக்க வேண்டும். காமராஜ் நகரில் வருவாய்த்துறைக்கு சொந்தமான இடம் உள்ளது. இவ்விடத்தில் மையத்தை அமைக்கலாம். இந்த இடத்தை மாவட்ட நிர்வாகம், ஆய்வு செய்து வழங்க வேண்டும். இவ்வாறு அவர் மனுவில் கூறியுள்ளார்.

மனுவை பெற்ற டி.ஆர்.ஓ., சதீஷ், "வருவாய் துறை இடமாக இருந்தால், ஆய்வு செய்து நடவடிக்கை எடுக்கிறோம்," என்றார்.

## 3,000 மரக்கன்று நடும் திட்டம் துவக்கம்

பவானிசாகர்: பவானிசாகர், வனத்துறை சார்பில், தீவிர மரக்கன்றுகள் நடும் திட்டத்தில், வனப்பகுதி முழுவதும், 3,000 மரக்கன்று நடும் பணி நடக்கிறது. வனசரகர் பெர்னாட் கூறியதாவது: பவானிசாகர் மற்றும் சுற்று வட்டார வனப்பகுதியில், தீவிர மரக்கன்றுகள் நடும் திட்டத்தில், செண்பகம், வேம்பு, அலங்கார கொண்டை, புங்கன், சொர்க்கம் உள்பட பல்வேறு மரக்கன்றுகள் நடப்படுகின்றன. மொத்தம், 3,000 மரக்கன்று நடப்பட உள்ளது. இரண்டு வார காலத்தில் இப்பணிகள் முடிக்கபடும். இவ்வாறு, அவர் கூறினார்.

## சூரியகாந்தி எண்ணெய் ஆலையை திறக்க விவசாயிகள் கூட்டத்தில் வேண்டுகோள்

கிருஷ்ணகிரி: 'போச்சம்பள்ளியில் உள்ள, சூரியகாந்தி எண்ணெய் ஆலையை மீண்டும் திறக்க வேண்டும்' என, விவசாயிகள் கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

கிருஷ்ணகிரி கலெக்டர் அலுவலகத்தில், விவசாயிகள் குறைதீர்கூட்டம் கூட்டம், கலெக்டர் ராஜேஷ் தலைமையில் நடந்தது. டி.ஆர்.ஓ., கிருஷ்டி முன்னிலை வகித்தார். கூட்டத்தில், பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து விவசாயிகள் பேசியதாவது: காய்ந்த மா, தென்னை உள்ளிட்ட மரங்களுக்கு இழப்பீடு வழங்க வேண்டும். ஒரு லட்சம் ஏக்கர் பரப்பளவு நிலத்தில் உள்ள மா, தென்னைகளை ஆய்வு செய்து சரியான புள்ளி விவரம் எடுத்து, பாதிக்கப்பட்ட அனைத்து விவசாயிகளுக்கும் இழப்பீடு வழங்க வேண்டும். மழைக்காலங்களில் சிறுதானிய விதைகளை

சேமித்து வைக்க முடியவில்லை. எனவே, அரசம்பட்டியில் பழுதடைந்த தானிய கிடங்கை சரி செய்ய வேண்டும்.

போச்சம்பள்ளி பகுதியில், சூரியகாந்தி எண்ணெய் ஆலையை மீண்டும் திறக்க வேண்டும். இதன் மூலம் விவசாயிகள் மற்றும் அப்பகுதி மக்கள் பயன் பெறுவர். சப்பாணிப்பட்டியில் மின்வாரிய அலுவலகம் அமைக்க வேண்டும். ஆவின் பால் பரிசோதனையை, ஐ.எஸ்.ஐ., முறையில் செய்ய வேண்டும். தென்பெண்ணை ஆற்றில் இருந்து, 46 பஞ்சாயத்துகளுக்கு குடிநீர் வினியோகம் செய்யப்படுகிறது. ஆற்றில் உள்ள அசுத்த தாவரங்களால் தண்ணீர் மாசுபடுவதுடன், துர்நாற்றம் வீசுகிறது. எனவே அசுத்த தாவரங்களை அகற்ற, 100 நாள் வேலைவாய்ப்பு திட்ட பணியாளர்களை பயன்படுத்த வேண்டும். மாவட்டத்தில் உள்ள ஏரிகளை விவசாயிகளே தூர்வார அரசாணை வெளியிட வேண்டும். சந்தூர் ஏரிக்கு, கே.ஆர்.பி., அணையின் உபரி நீரை திறந்து விட வேண்டும். இவ்வாறு விவசாயிகள் பேசினர்.

கலெக்டர் ராஜேஷ் பேசியதாவது: காய்ந்த தென்னை, மா மரங்கள் குறித்து ஆய்வு மற்றும் கணக்கீடு நடத்தப்படும். வரும் டிசம்பர் மாத இறுதிக்குள் புள்ளி விவரம் சேகரிக்கப்பட்டு, மார்ச் மாதத்திற்குள் இழப்பீடு பெற்று தரப்படும். தென்பெண்ணை ஆற்றில் உள்ள அசுத்த தாவரங்கள் அகற்ற நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

## குறைந்த விதையில் துவரை சாகுபடி:அதிகாரி ஆலோசனை

திண்டுக்கல்:விவசாயிகள் துவரை உட்பட பயறு வகைகளை மாற்று முறையில் சாகுபடி செய்து அதிக லாபம் பெறலாம். மனிதன் உடல் <உறுப்புகளின் வளர்ச்சிக்கு தேவையான புரோட்டின் சத்து இறைச்சி மற்றும் பயறு வகைகளில் உள்ளது. ஒரு மனிதனுக்கு நாளொன்றுக்கு

சராசரியாக 110 கிராம் பயிறு தேவை. ஆனால் 50-60 கிராம்தான் கிடைக்கிறது.

எனவே பயறு வகைகளின் உற்பத்தியை அதிகரிக்க வேளாண் துறை நடவடிக்கை மேற்கொண்டுள்ளது. பயறு வகைகளில் அதிகமானோர் விரும்பும் துவரை, பாரம்பரியாமக மானாவாரி பயிராகவே சாகுபடி செய்யப்படுகிறது. இந்த முறையில் மாற்றம் செய்து நாற்று விட்டு நடவு செய்யும் முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளது.

இதில் அதிக இடைவெளியில் குறைந்த விதைகளை பயன்படுத்தி சாகுபடி செய்யலாம். அதன் மூலம் ஊடுபயிர் சாகுபடி செய்யவும், கூடுதல் வருமானமும் கிடைக்கும். பயறு வகைகளுக்கு 2 சதவீத டி.ஏ.பி., கரைசல் தெளிப்பது அதிக மகசூலுக்கு வழிவகுக்கும். திண்டுக்கல் மாவட்ட விதைச்சான்று உதவி இயக்குநர் விஜயராணி கூறுகையில்,""இப்புதிய முறை தட்டைப்பயறு, உளுந்து மற்றும் பாசிப்பயறு உள்ளிட்ட அனைத்துக்கும் பொருந்தும். எனவே அனைவரும் ஆதார நிலை விதைகளை பயன்படுத்தி சான்று விதைகளை உற்பத்தி செய்து கூடுதல் மகசூல், அதன் மூலம் அதிக லாபம் பெறலாம்', என்றார்.

## பேரிடர் மேலாண்மைகுறித்து பயிற்சி

ஒட்டன்சத்திரம்:ஒட்டன்சத்திரத்தில் உள்ள மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தில் (டயட்) பேரிடர் மேலாண்மை பயிற்சி நடந்தது.அரசு வருவாய் நிர்வாகம், பேரிடர் மேலாண்மை மற்றும் பேரிடர் தணிக்கைத் துறை சார்பில் புயல், மழை, வெள்ளம், நிலச்சரிவு மற்றும் சுனாமி காலங்களில் முன்னெச்சரிக்கை, தற்காப்பு முறை பற்றி எடுத்துரைக்கப்பட்டது.

தீயணைப்பு, மருத்துவம், செஞ்சிலுனைச் சங்கம், பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் நிறுவன கருத்தாளர்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

ஆசிரியர் பயிற்சி நிறுவன முதல்வர் நடராஜன் தலைமை வகித்தார். கல்வியாளர்கள் பழனிச்சாமி, முருகன், சந்திரஹாசன், அன்புமுத்து, கிருஷ்ணமூர்த்தி, அசோக்குமார் மற்றும் டாக்டர் ஆசைத்தம்பி பேசினர். கல்வியாளர்கள், வட்டார வள மைய ஆசிரியப் பயிற்றுனர்கள் பயிற்சி பெற்றனர்.

## இயந்திரம் மூலம் நாற்றாங்கால்அமைக்கும் பணி துவங்கியது

கம்பம்:இயந்திரம் மூலம் நாற்றாங்கால் அமைக்கும் பணி கம்பம் வட்டாரத்தில் துவங்கியுள்ளது. கம்பம் பகுதியில் ஒருங்கிணைந்த உணவு தானிய உற்பத்தி பெருக்கு (நெல்) திட்டத்தின் கீழ், இயந்திர நடவு மேற்கொள்வதற்கு நாற்றாங்கால் அமைக்கும் பணி நடந்து வரு கிறது. இயந்திர நடவிற்காக பாய் நாற்றாங்கால், குழித்தட்டு நாற்றாங்கால் அமைப்பதை தேனி இணை இயக்குநர் வேங்கடசுப்ரமணியன், உதவி இயக்குநர் அசோகன் ஆகியோர் பார்வையிட்ட னர்.பின்னர், உதவி இயக்குநர் அசோகன் கூறுகையில், ""நாற்றாங்கால் அமைக்க 8 சென்ட் இடம் தேவைப்படும். ஆனால், இயந்திர நடவு மேற்கொள்ளும் போது ஏக்கருக்கு ஒரு சென்ட் இடம் போதுமானது. பயிர் இடைவெளி 22.5 என்ற அளவில் கடைப்பிடிக்கப்படும். இதனால் பயிர்களுக்கு காற்றோட்டம் கிடைக்கும். களை எடுப்பதற்கு ஏதுவாக இடைவெளி கிடைக்கும். தூர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும்.

இயந்திர நடவு மேற்கொள்வதால் ஏக்கருக்கு 500 கிலோ கூடுதலாக மகசூல் கிடைக்கும். எக்டருக்கு ரூ. 3 ஆயிரம் பின்னேற்பு மானியம் கிடைக்கும். இவ்வாறு கூறினார்.

## விவசாய கல்லூரி மாணவிகள் களஆய்வு

தேனி:லட்சுமிபுரத்தை சேர்ந்த பட்டுப்புழு விவசாயி பிரபு தோட்டத்தில், "சென்டெக்ட்' நிறுவன விஞ்ஞானி மற்றும் தொகுப்பாளரான பேராசிரியர் மாரிமுத்து தலைமையில் குள்ளப்புரம் விவசாய தொழில்நுட்ப கல்லூரி மாணவிகள் ச.பரமேஸ்வரி, காவிய பாலா, ஆதிரா விஸ்வநாத், தேவிகாநாத், விஜி, பி.ஜெ., கு.மகாலட்சுமி, கோ.சண்முகப்பிரியா, ரீபாஜோசப், மு.கீர்த்தனா, க.பூமாரி ஆகியோர் மல்பரி தோட்டத்தில் வயல்வெளிச்சூழலை ஆய்வு நடத்தினர்.

அதில், சாம்பல்நோய், இலைப்புள்ளி நோய் உட்பட சில நோய் பூச்சிகளை அடையாளம் கண்டு கொண்டனர். இலை மகசூலை குறைக்கும் பூச்சி தாக்குதலை தடுக்க, இயற்கை வழி கரைசலை பரிந்துரை செய்தனர். மண் மாதிரி செயல்விளக்கம் நடைபெற்றது. மண் மாதிரி எடுப்பதின் அவசியம், மண் மாதிரி மூலம் உரச்செலவை குறைத்தல் குறித்து விளக்கப்பட்டது

## மழையை நம்பி வெங்காய சாகுபடி:கலக்கத்தில் விவசாயிகள்

சத்திரப்பட்டி;சத்திரப்பட்டி பகுதிகளில் வடகிழக்கு பருவமழையை நம்பி விவசாயிகள் வெங்காய பயிர்களை நடவு செய்துள்ளன நிலையில்,அவர்கள் கலக்கத்தில் உள்ளனர்.சத்திரப்பட்டி, ஜமீன் நத்தம்பட்டி, கோபாலபுரம் உட்பட பல கிராமங்களில் கடந்த சில நாட்களாக பகலில் வெயிலும், மாலையில் லேசான மழையும் பெய்தது. இதை நம்பி 50 ஏக்கர் பரப்பளவில் வெங்காயம் பயிரிட்டுள்ளனர். வழக்கமாக இந்த காலகட்டத்தில் மக்காச்சோளம், குதிரைவாலி, உழுந்து பயிர்களை மட்டுமே பயிரிடுவது வழக்கம். இந்த ஆண்டு விவசாயிகள் வெங்காயம் பயிரிட்டுள்ளனர். பருவமழை தவறினால் வெங்காய பயிர்கள் என்னாகுமோ என பரிதவிப்பில் உள்ளனர்.

விவசாயி கிட்டப்பன் கூறுகையில்,"" வடகிழக்கு பருவமழையை நம்பி வெங்காயம் நடவு செய்துள்ளேன். நன்றாக வளர்ந்துள்ளன. தொடர்ந்து 40 நாட்கள் மழை பெய்தால் பயிர்களுக்கு உதவியாக இருக்கும். இல்லாவிட்டால் விவசாயிகள் மகசூலை இழக்கவேண்டிய நிலை ஏற்படும். இரவிப்பாசனம் செய்வதற்கு கிணறுகளில் தண்ணீர் இல்லை. மழையை மட்டுமே நம்பி பயிரிட்டுள்ளேன்,' என்றார்.

## நாற்று இயந்திர செயல்பாடுஇணைப்பதிவாளர் ஆய்வு

தளவாய்புரம்;சேத்தூர்,வத்திராயிருப்பு பகுதி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கி மூலம் செயல்படும் நாற்று நடும் இயந்திரத்தின் செயல்பாட்டை மாவட்ட கூட்டுறவு இணைப்பதிவாளர் குருமூர்த்தி ஆய்வு செய்தார்.சேத்தூரில் மகாதேவன் என்பவரது வயலில் நாட்டு நடும் இயந்திரத்தை இயக்கினார்.விவசாயிகள் தங்கள் விவசாய பணிகளுக்கு கூட்டுறவு வங்கிகளில் உள்ள நாட்டுநடும் இயந்திரம், களை எடுப்பான், நெல் அறுவடை இயந்திரம், டிராக்டர்களை குறைந்த செலவில் பெற்று பயனடையுமாறு கூறினார். சேத்தூர் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்க செயலாளர் பாக்யராஜ்,விவசாயிகள் சங்க மாவட்ட செயலாளர் அம்மையப்பன் கலந்து கொண்டனர்.

## உரத்தை அதிக விலைக்கு விற்றால் நடவடிக்கை

விருவிருதுநகர்;""யூரியா உரத்தை பதுக்கவோ, நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலைக்கு விற்பவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்," என, கலெக்டர் ராஜாராமன் எச்சரித்துள்ளார். அவர் கூறியதாவது: மாவட்டத்தில் தற்போது 51,996 எக்டேர் பரப்பில் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. ராபி பருவத்தில் பயிர் சாகுபடிக்கு தேவையான யூரியா, டி.ஏ.பி., பொட்டாஷ், காம்ப்ளக்ஸ் தனியார், தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருப்பு உள்ளது. தற்போது வடகிழக்கு பருவ மழை துவங்கி விட்டதால் யூரியா தேவை அதிகரிக்கும். இதை பயன்படுத்தி தனியார் உர விற்பனையாளர்கள்

யூரியாவை பதுக்கினாலோ, உரங்களை அரசு நிர்ணயித்த விலையை விட கூடுதல் விலைக்கு விற்பனை செய்தாலே கடும் நடவடிக்கை எடுக்கப்படும் , என்றார்.

**குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பலத்த மழை அணைகள் நிரம்புகிறது; ஐந்து பேர் பலி**

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்து வரும் மழையால் அணைகள் நிரம்புகிறது. மழை பாதிப்பால் இரண்டு வயது குழந்தை உட்பட ஐந்து பேர் உயிரிழந்துள்ளனர்.

குமரி மாவட்டத்தில் கடந்த ஒரு வார காலமாக பலத்த மழை பெய்து வருகிறது. இதனால் மாவட்டத்தில் பெரும்பாலான குளங்களும் நிரம்பி மறுகால் பாய்கிறது. ஓரிரு இடங்களில் குளங்கள் உடைப்பெடுத்துள்ளது. மாவட்டத்தின் முக்கிய அணைகளான பேச்சிப்பாறை, பெருஞ்சாணி, சிற்றாறு ஒன்று மற்றும் இரண்டு அணைகள் அதன் முழு கொள்ளளவை எட்டிக்கொண்டிருக்கிறது.

இதனால் குழித்துறை தாமிரபரணி, கோதையாறு பாயும் இடங்களில் தாழ்வான பகுதிகளில் வாழும் மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. ஆறு பாயும் இடங்ளில் சைரன்களும் அமைக்கப்பட்டுள்ளது. திடீர் என்று மழை அதிகமாக அணைகள் திறக்க வேண்டிய நிலை ஏற்பட்டால் உடனடியாக சைரன்கள் ஒலிக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தொடர் மழையால் மாவட்டத்தில் குளிர்ந்த காலநிலை நிலவுகிறது.

கடந்த இரண்டு நாட்களில் மட்டும் மழை பாதிப்புக்கு ஐந்து பேர் இறந்துள்ளனர். நாகர்கோவில் அருகே பார்வதிபுரம் அண்ணாநகரை சேர்ந்த சங்கர்-மஞ்சு தம்பதியினர் மழை காரணமாக வீட்டில் டிவி கேபிளை வெளியே எடுத்து விட்டிருந்தனர். இவர்களது இரண்டு வயது

குழந்தை ஆகாஷ் அந்த கேபிளை எடுத்து கடித்துள்ளது. இதில் மின்சாரம் தாக்கி குழந்தை இறந்தது.

ஈத்தாமொழி அருகே பொழிக்கரை கடல் பகுதியில் மீனவர்கள் சென்ற கட்டுமரம் கடலில் கவிழ்ந்ததில் தஸ்நேவிஸ் என்பவர் இறந்தார். திருவட்டார் அருகே முதலார் பகுதியில் தனியார் முந்திரி தொழிற்சாலையின் புகைகோபுரம் இடிந்து விழுந்ததில் பக்கத்து வீட்டில் தூங்கி கொண்டிருந்த மூதாட்டி சபரிபாய் சம்பவ இடத்திலேய இறந்தார். இனையன்புத்தன்துறையில் கடற்கரையில் நின்று கொண்டிருந்த பீட்டர் என்பவரை கடல் அலை இழுத்து சென்றது. குழித்துறை தாமிரபரணி ஆற்றில் சப்பாத்து பாலத்தை கடக்க முயன்ற ராமச்சந்திரன் என்பவர் தண்ணீரில் மூழ்கி இறந்தார். மழை தொடர்வதால் மாவட்டத்தில் வருவாய் துறை அதிகாரிகள் உஷார் படுத்தப்பட்டுள்ளனர்.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை

# தினமணி

நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

குறைந்த விலை துவரம் பருப்பு நாளை முதல் விற்பனை



குறைந்த விலை துவரம் பருப்பு விற்பனை செய்யும் திட்டம் ஞாயிற்றுக்கிழமை (நவ. 1) தொடங்குகிறது. சென்னையில் 48 கடைகள் உள்பட மாநிலத்தில் 91 அங்காடிகளில் துவரம் பருப்பு விற்பனை செய்யப்படுகிறது. மத்திய அரசு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த 5 ஆயிரம் டன் துவரையில், 500 டன்னை தமிழக அரசு பெற்றுள்ளது. 9 ஆலைகளில் பருப்பை உடைக்கும் பணி: இறக்குமதி செய்யப்பட்ட முழு துவரையானது, பருப்பாக மாற்ற ஆறு நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. இதை சென்னையில் 9 தனியார் ஆலைகளில் பருப்பாக உடைக்கும் பணிகள் கடந்த 10 நாள்களாக நடைபெற்று வருகின்றன. தண்டையார்பேட்டையில் உள்ள ஒரு ஆலையில் மட்டும் சுமார் ஏழு டன் அளவுக்கு மாற்றப்படுகிறது.

இந்த ஆலைகள் 24 மணி நேரமும் இயங்குவதால், 500 டன் துவரையில் பாதிக்கும் மேற்பட்டவை பருப்பாக மாற்றப்பட்டுள்ளன. பின்னர் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அரை கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகளாக பருப்புகள் போடப்பட்டு வருகின்றன.

குறைந்த விலையில் நாளை முதல் விற்பனை: இந்த நிலையில், முதல்வர் ஜெயலலிதா அறிவித்தபடி, குறைந்த விலையிலான துவரம் பருப்புத் திட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை (நவ. 1) முதல் நடைமுறைக்கு வரவுள்ளது. இது குறித்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறியதாவது:

சென்னை, மதுரை உள்ளிட்ட நகரங்களில் செயல்படும் 91 அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக 500 டன் துவரையானது, இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில், 350 டன் துவரையானது, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான கடைகளுக்கும், மீதமுள்ள 150 டன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான அங்காடிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

91 கடைகளில் விற்பனை: சென்னையில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் (டி.யு.சி.எஸ்.,) சொந்தமான 12 கடைகளிலும்,

36 கூட்டுறவுக் கடைகளிலும் துவரம் பருப்பு விற்பனை செய்யப்படும். இதுதவிர, மாநிலத்தில் மற்ற இடங்களில் 43 கூட்டுறவுக் கடைகள், நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான கடைகளிலும் விற்ட்னை செய்யப்படும்.

**அரை கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகள்**

துவரம் பருப்பு விற்பனைக் கடைகள் அனைத்தும் காலை 10 முதல் இரவு 8 வரை செயல்படும். பிற்பகல் 1 முதல் 2.30 வரை உணவு இடைவேளைக்காக மூடப்பட்டிருக்கும்.

அரை கிலோ ரூ.55-க்கும், ஒரு கிலோவை ரூ.110-க்கும் பெறலாம். கடைகளுக்கு பாக்கெட்டுகள் எண்ணிக்கை இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எந்த பாக்கெட்டுகளை அதிகளவு விரும்பி வாங்குகிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மக்களின் தேவை திட்டம் தொடங்கிய ஓரிரு நாள்களில் தெரிந்து விடும் என்று கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

**செஞ்சேரியில் கொப்பரை கொள்முதல் மையம் தொடக்கம்**

பல்லடம் அருகே செஞ்சேரி கூட்டுறவு ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் கொப்பரை கொள்முதல் தொடக்க விழா வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

விழாவிற்கு, ஊராட்சி மன்றத் தலைவர் முத்துமாணிக்கம் தலைமை வகித்தார். கூட்டுறவு வங்கித் தலைவர்கள் வதம்பச்சேரி பி.கந்தசாமி, சூலூர் லிங்கசாமி, பாபு என்ற ஜெயசந்திரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கொப்பரை கொள்முதல் மையத்தை கோவை மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.கனகராஜ் தொடக்கி வைத்துப் பேசினார்.

இதில், டெல்லி இப்கோ அறக்கட்டளை உறுப்பினர் ஒ.வி.ஆர்.ராமசந்திரன், ஒன்றியக் கவுன்சிலர் திருமலைசாமி, வட்டார அட்மா தலைவர் எஸ்.பி.ராமசாமி, தென்னை விவசாயி

மோகன்மந்தராசலம், கூட்டுறவுச் சங்க மேலாண்மை இயக்குநர் திருமாவளவன் உள்பட பலர் பங்கேற்றனர்.

4 விவசாயிகள் 190 மூட்டை கொப்பரையை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர். இதில், முதல் தரக் கொப்பரை ரூ. 71.50-க்கும், இரண்டாம் தரக் கொப்பரை ரூ. 70.50-க்கும், மூன்றாம் தரக் கொப்பரை ரூ. 70-க்கும் விற்பனையானது.

மொத்தம், ரூ. 6 லட்சத்து 78 ஆயிரத்து 300-க்கு ஏலம் மூலமாக விற்பனையானது. வெளி மார்க்கெட் விலையை விட கூடுதல் விலைக்கு கொப்பரை விற்பனையானதால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தேங்காய் எண்ணெய்யில் கலப்படம் செய்யப்பட்டு விற்பனை செய்யப்படுவதால் மக்களின் நுகர்வு குறைந்து விற்பனை பாதிப்படையவதால் கொப்பரைக்கு நல்ல விலை கிடைப்பதில்லை. கலப்படத்தை தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோவை மாவட்ட ஊராட்சித் தலைவர் ஆர்.கனகராஜிடம் விவசாயிகள் கூறினர்.

இதுதொடர்பாக, முதல்வர் ஜெயலலிதா, அமைச்சர் எஸ்.பி.வேலுமணி ஆகியோரின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் என ஊராட்சித் தலைவர் கூறினார்.

**பனை விதை நடும் பணி தொடக்கம்**

ஈரோட்டில் அரசுப் பள்ளி மாணவர்கள் சார்பில், பனைமரம் விதை நடும் பணியை மாவட்ட ஆட்சியர் எஸ்.பிரபாகர் வெள்ளிக்கிழமை தொடங்கிவைத்தார்.

ஈரோடு மாவட்டம் முழுவதும் பள்ளிகளின் சார்பில், பனை விதை நடப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக குமலன் குட்டை அரசு மேல்நிலைப் பள்ளியைச் சேர்ந்த மாணவ, மாணவிகள் சார்பில் 750 பனை விதைகள் நடும் பணி வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இப்பணியை தொடக்கி வைத்து ஆட்சியர் பிரபாகர் பேசியதாவது:

கடும் வறட்சியிலும் மக்களுக்கு உண்ண உணவு தரக்கூடிய சிறந்த மரம் பனை மரமாகும். பனை மரங்கள் நீர்நிலைகளின் கரைகளை மிகவும் வலிமையாக்கக் கூடிய இயல்பைக் கொண்டுள்ளன. நமது முன்னோர்கள் பனை மரங்களைத் தான் ஏரி, குளங்கள், நதிக்கரைகள் ஆகியவற்றின் கரைகளை பலமாக்கப் பயன்படுத்தியுள்ளனர்.

நம் வாழ்வில் இரண்டறக் கலந்த பனைமரம் அண்மைக்காலமாக அழிவை நோக்கிச் சென்று கொண்டுள்ளது. இந்த அழிவைத் தடுக்க நாம் அனைவரும் செயல்பட வேண்டும். இதற்காக ஈரோடு மாவட்டப் பள்ளிகளில் உள்ள சுற்றுச்சூழல் மன்றங்கள், தேசிய பசுமைப்படை, நாட்டு நலப்பணித் திட்டம் போன்ற அமைப்புகளில் உள்ள மாணவர்கள் மூலமாக பனை விதைகள் சேகரிக்கப்பட்டு வருகிறது.

இந்த விதைகளை கீழ்பவானி பிரதான வாய்க்கால், மாவட்டத்தில் உள்ள ஏரி, குளங்களின் கரைகள், நெடுஞ்சாலை, பஞ்சாயத்து சாலைகள் உள்ளிட்ட பல இடங்களில் அந்தந்த வட்டாரத்தில் உள்ள மக்கள், விவசாயிகள் பங்கேற்புடன் நட திட்டமிடப்பட்டுள்ளது என்றார்.

இந்நிகழ்ச்சியில், பள்ளித் தலைமை ஆசிரியர் ரவிசந்திரன், உதவித் தலைமை ஆசிரியர் தனபால், சுற்றுச்சூழல் மன்ற பள்ளி ஒருங்கிணைப்பாளர் மாணிக்கம், பள்ளி ஆசிரியர்கள், சுற்றுச்சூழல் மன்ற மாவட்ட ஒருங்கிணைப்பாளர் கீதா, தேசிய பசுமைப்படை மாவட்ட ஒருங்கிணைப்பாளர் விஜயேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**ராமேசுவரம் பகுதியில் 20 மி.மீ. மழை**

ராமேசுவரம் தீவுப்பகுதியில் வெள்ளிக்கிழமை சராசரியாக 20 மி.மீ. மழை பெய்தது. இதனால் பொதுமக்களின் இயல்பு வாழ்கை பாதிப்படைந்தது.

ராமேசுவரம் அருகே உள்ள தங்கச்சிமடத்தில் 28.2 மி.மீட்டரும், பாம்பனில் 14.2 மி.மீட்டரும்,ராமேசுவரம் பகுதியில் 20.8 மி.மீட்டரும் மழை பதிவாகியுள்ளது.

மேலும் இப்பகுதியில் வானம் புகை மண்டலத்துடன் காணப்பட்டது. இதனால் கூலித் தொழிலாளர்களின் இயல்பு வாழ்க்கை பாதிப்படைந்தது.

## ரூ.110-க்கு துவரம் பருப்பு: மதுரையில் 11 இடங்களில் நாளை முதல் கிடைக்கும்

மதுரையில் ரூ.110-க்கு துவரம் பருப்பு விற்பனை ஞாயிற்றுக்கிழமை (நவ.1) தொடங்க உள்ளதையடுத்து, அதைக் கண்காணிக்க சிறப்புக் குழுவை கூட்டுறவுத் துறை அமைத்துள்ளது.

தமிழக முதல்வரால் அறிவிக்கப்பட்ட ஒரு கிலோ துவரம் பருப்பு ரூ.110-க்கு விற்பனை செய்யும் திட்டம் கூட்டுறவுத் துறை மூலம் ஞாயிற்றுக்கிழமை தொடங்கப்படுகிறது.

மதுரையில் திருமலை நாயக்கர் மகால் பகுதி, திருநகர், அழகப்பன் நகர் ஆகிய இடங்களில் உள்ள பாண்டியன் நுகர்வோர் கூட்டுறவு பண்டக சாலை சிறப்பு அங்காடி, பொன்னகரம் மதுரா கோட்ஸ் பண்டகசாலை சிறப்பு அங்காடி, பழங்காநத்தம் அரசுப் போக்குவரத்துக் கழகப் பணியாளர் பண்டகசாலை சிறப்பு அங்காடி, ரேஸ்கோர்ஸ் பகுதி பண்டகசாலை சிறப்பு அங்காடி, அலங்காநல்லூர் சர்க்கரை ஆலை பண்டகசாலை, டிவிஎஸ் பண்டகசாலை, திருமங்கலம் கூட்டுறவு பண்டகசாலை ஆகிய இடங்களில் விற்பனை செய்யப்பட உள்ளது.

இதற்கான துவரம் பருப்பு சென்னையில் இருந்து வரவழைக்கப்பட்டு, தற்போது அரைக் கிலோ பாக்கெட்டுகளாகத் தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. அரைக் கிலோ பாக்கெட் ரூ.55-க்கு கிடைக்கும்.

இந்த விற்பனையைக் கண்காணிக்க கூட்டுறவுத் துறை பொது விநியோகத் திட்ட துணைப் பதிவாளர், சார்பதிவாளர்கள் கொண்ட 11 குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இக்குழுவினர் தற்போது பாக்கெட் தயாரிக்கும் பணியில் இருந்தே கண்காணிப்பைத் தொடங்கியுள்ளனர்.

**வெம்பாக்கம் வட்டார விவசாயிகள் கவனத்துக்கு...**

வெம்பாக்கம் வட்டாரத்தில் பயறு வகை ஒட்டு மொத்த செயல்விளக்க இடம் அமைக்கவும், மானியம் பெறவும் அழைப்பு விடுக்கப்பட்டு உள்ளது.

இதுகுறித்து வெம்பாக்கம் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் கோ.பாண்டியன் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்து இருப்பதாவது:

வெம்பாக்கம் வட்டாரத்தில் நடப்பு ரபி பருவத்தில் தேசிய உணவுப் பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயறுவகை ஒட்டு மொத்த செயல் விளக்க இடம் அமைக்க 200 ஹெக்டேரும், மணிலாவில் ஊடுபயிராக பயறு வகை சாகுபடி செய்ய 100 ஹெக்டேர் இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது. மேற்கண்ட திட்டத்தில் பயனடைய விவசாயிகள் குழுவாக அமைத்து தலா ஒரு கிராமத்தில் குறைந்தபட்சம் 25 ஹெக்டேர் நிலப்பரப்பளவில் செயல் விளக்கம் செய்தல் வேண்டும். ஒவ்வொரு விவசாயிக்கும் ஒரு ஹெக்டேர் பரப்பளவு நிலம் இருக்க வேண்டும்.

மேலும் மணிலா விதைகளை விதைப்புக் கருவி மூலம் விதைத்தல் வேண்டும்.

பயறு செயல் விளக்க இடத்துக்கு ஒரு ஹெக்டேருக்கு ரூ. 4 ஆயிரமும், மணிலா ஊடுபயிர் செயல் விளக்க இடம் அமைக்க ஒரு ஹெக்டேருக்கு ரூ. 7500 மானியமாக வழங்கப்படுகிறது.

விருப்பமுள்ள விவசாயிகள் உடனடியாகக் குழு அமைத்து செயல் விளக்க இடம் திட்டத்தின் கீழ் நவம்பர் 10-க்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும், தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலரை

அணுகி அதற்குண்டான ஆவணங்களை சமர்ப்பித்து பயன் அடையலாம் என தெரிவித்து உள்ளார்.

**நெற்பயிரில் புகையான் தாக்குதலை கட்டுப்படுத்த வழிமுறைகள் : வேளாண் அதிகாரி விளக்கம்**

வாடிப்பட்டி வேளாண்மை கோட்டம் வேளாண்மை உதவி இயக்குநர் ப.ராமநாதன் வெளியிட்டுள்ள அறிக்கை:

வாடிப்பட்டி வேளாண்மை கோட்டத்தில் நெல் பயிரிட்டுள்ள விவசாயிகள் தற்போது நிலவிவரும் தட்ப வெப்ப நிலையில் நெற்பயிரில் புகையான் தாக்கிட வாய்ப்பு உள்ளது. இதனைக் கட்டுப்படுத்த பின்வரும் முறைகளை கடைபிடிக்க வேண்டும்.

அதாவது, பயிருக்கு அதிக அளவில் யூரியா இடுவதை தவிர்க்க வேண்டும். பூச்சிமருந்து அடிக்கும் முன்பு வயலில் தேங்கியுள்ள தண்ணீரை வடித்து விட வேண்டும். வேம்பு எண்ணெய் 3 சதவிகிதம் ஹெக்டேருக்கு 15 லிட்டர் மற்றும் பாஸலோன் 35 இசி 1500 மில்லி லிட்டர் ஹெக்டேருக்கு தெளிக்க வேண்டும். அல்லது அஸிபேட் 75 சதவிகிதம் எஸ்பி 666- 1000 கிராம் ஹெக்டேருக்கு அல்லது இமிடாகுளோபிரிட் 17.8 எஸ்.எல். 100. 125 மில்லி லிட்டர் ஹெக்டேருக்கு தெளிக்க வேண்டும் என அதில் தெரிவித்துள்ளார்.

மேலும் விவசாயிகள் தங்களது வயல்களில் புகையான் தாக்குதல் காணப்பட்டால் உடனடியாக வாடிப்பட்டி வேளாண் அலுவலர்களை அணுகிட வேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

**ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி இன்று துவக்கம்**

வெள்ளக்கோவில் நிழல்கள் தன்னார்வ அறக்கட்டளை சார்பில் உள்ளூரில் ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணி சனிக்கிழமை துவக்கப்படுகிறது.

இந்த அறக்கட்டளையினர் ஏற்கெனவே நூற்றுக்கணக்கான மரக்கன்றுகளை நட்டு, முறையாகப் பராமரித்து வருகின்றனர்.

தேவைப்படுபவர்களுக்கு மரக்கன்றுகளை இலவசமாகக் கொடுத்து, பராமரிப்பதற்குப் பணத்தையும் அறக்கட்டளை கொடுக்கிறது.

இந்நிலையில், கோவை சாலை குளத்துக்காட்டில் சுமார் ஒரு ஏக்கர் பொது நிலத்தை தூய்மைப்படுத்தி அங்கு மரக்கன்றுகள் நடப்படுகின்றன. இப்பணியை மக்கள் பிரதிநிதிகள், அரசு அதிகாரிகள் சனிக்கிழமை துவக்கி வைக்கின்றனர்.

## குறைந்த விலை துவரம் பருப்பு நாளை முதல் விற்பனை

குறைந்த விலை துவரம் பருப்பு விற்பனை செய்யும் திட்டம் ஞாயிற்றுக்கிழமை (நவ. 1) தொடங்குகிறது. சென்னையில் 48 கடைகள் உள்பட மாநிலத்தில் 91 அங்காடிகளில் துவரம் பருப்பு விற்பனை செய்யப்படுகிறது.

மத்திய அரசு வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்த 5 ஆயிரம் டன் துவரையில், 500 டன்னை தமிழக அரசு பெற்றுள்ளது.

9 ஆலைகளில் பருப்பை உடைக்கும் பணி: இறக்குமதி செய்யப்பட்ட முழு துவரையானது, பருப்பாக மாற்ற ஆறு நிலைகளைக் கடக்க வேண்டியுள்ளது. இதை சென்னையில் 9 தனியார் ஆலைகளில் பருப்பாக உடைக்கும் பணிகள் கடந்த 10 நாள்களாக நடைபெற்று வருகின்றன. தண்டையார்பேட்டையில் உள்ள ஒரு ஆலையில் மட்டும் சுமார் ஏழு டன் அளவுக்கு மாற்றப்படுகிறது.

இந்த ஆலைகள் 24 மணி நேரமும் இயங்குவதால், 500 டன் துவரையில் பாதிக்கும் மேற்பட்டவை பருப்பாக மாற்றப்பட்டுள்ளன. பின்னர் கிடங்குகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு அரை கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகளாக பருப்புகள் போடப்பட்டு வருகின்றன.

குறைந்த விலையில் நாளை முதல் விற்பனை: இந்த நிலையில், முதல்வர் ஜெயலலிதா அறிவித்தபடி, குறைந்த விலையிலான துவரம் பருப்புத் திட்டம் வரும் ஞாயிற்றுக்கிழமை (நவ. 1) முதல் நடைமுறைக்கு வரவுள்ளது.

இது குறித்து, கூட்டுறவுத் துறை அதிகாரிகள் கூறியதாவது: சென்னை, மதுரை உள்ளிட்ட நகரங்களில் செயல்படும் 91 அங்காடிகளில் விற்பனை செய்யப்படுகிறது. இதற்காக 500 டன் துவரையானது, இரண்டாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அதில், 350 டன் துவரையானது, கூட்டுறவுத் துறைக்குச் சொந்தமான கடைகளுக்கும், மீதமுள்ள 150 டன் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான அங்காடிகளுக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.

91 கடைகளில் விற்பனை: சென்னையில் திருவல்லிக்கேணி நகரக் கூட்டுறவுச் சங்கத்துக்குச் (டி.யு.சி.எஸ்.,) சொந்தமான 12 கடைகளிலும், 36 கூட்டுறவுக் கடைகளிலும் துவரம் பருப்பு விற்பனை செய்யப்படும்.

இதுதவிர, மாநிலத்தில் மற்ற இடங்களில் 43 கூட்டுறவுக் கடைகள், நுகர்பொருள் வாணிபக் கழகத்துக்குச் சொந்தமான கடைகளிலும் விற்ட்னை செய்யப்படும்.

**அரை கிலோ, ஒரு கிலோ பாக்கெட்டுகள்**

துவரம் பருப்பு விற்பனைக் கடைகள் அனைத்தும் காலை 10 முதல் இரவு 8 வரை செயல்படும். பிற்பகல் 1 முதல் 2.30 வரை உணவு இடைவேளைக்காக மூடப்பட்டிருக்கும்.

அரை கிலோ ரூ.55-க்கும், ஒரு கிலோவை ரூ.110-க்கும் பெறலாம்.

கடைகளுக்கு பாக்கெட்டுகள் எண்ணிக்கை இதுவரை ஒதுக்கீடு செய்யப்படவில்லை. எந்த பாக்கெட்டுகளை அதிகளவு விரும்பி வாங்குகிறார்கள் என்பதை அறிந்து அதற்கேற்ப அவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்படும். மக்களின் தேவை திட்டம் தொடங்கிய ஓரிரு நாள்களில் தெரிந்து விடும் என்று கூட்டுறவுத் துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

| பகுதி | பொறியாளர் செல்லிடப்பேசி |
|---|---|
| திருவொற்றியூர் | 81449 30901 |
| மணலி | 81449 30902 |
| மாதவரம் | 81449 30903 |
| தண்டையார்பேட்டை | 81449 30904 |
| ராயபுரம் | 81449 30905 |
| திரு.வி.க. நகர் | 81449 30906 |
| அம்பத்தூர் | 81449 30907 |
| அண்ணாநகர் | 81449 30908 |
| தேனாம்பேட்டை | 81449 30909 |
| கோடம்பாக்கம் | 81449 30910 |
| வளசரவாக்கம் | 81449 30911 |
| ஆலந்தூர் | 81449 30912 |
| அடையாறு | 81449 30913 |
| பெருங்குடி | 81449 30914 |
| சோழிங்கநல்லூர் | 81449 30915 |

## கரும்பு நிலுவைத் தொகையை வழங்காத ஆலைகள் மீது நடவடிக்கை

காஞ்சிபுரம் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு கரும்புக்கான நிலுவைத் தொகையை வழங்காத ஆலைகள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்ட ஆட்சியர் இரா.கஜலட்சுமி எச்சரித்தார்.

காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் விவசாயிகள் குறைதீர் கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் இரா.கஜலட்சுமி தலைமை வகித்தார்.

இந்தக் கூட்டத்தில், பல்வேறு விவசாயிகள், பழைய சீவரம் பகுதியில் இயங்கிவரும் தனியார் சர்க்கரை ஆலைகள் தங்களுக்கு வழங்க வேண்டிய நிலுவைத் தொகையை வழங்காமல் இருப்பதாகவும், அதை விரைவில் பெற்றுத் தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினர்.

இதில் மாவட்ட ஆட்சியர் கஜலட்சுமி பேசியபோது, இதுதொடர்பான முத்தரப்புக் கூட்டம் காஞ்சிபுரம் கோட்டாட்சியர் சிவருத்ரையா தலைமையில் சனிக்கிழமை (அக்.31) நடைபெற உள்ளது. இதில் விவசாயிகள் தரப்பிலும், ஆலை நிர்வாகம் தரப்பிலும் பிரதிநிதிகள் பங்கேற்கின்றனர். விவசாயிகளின் நிலுவைத் தொகையைப் பெற்றுத் தருவது குறித்து முடிவுகள் எடுக்கப்படும். அந்த முடிவுகளுக்கு ஆலை நிர்வாகம் கட்டுப்படாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

இதைத் தொடர்ந்து, மதுராந்தகம் விவசாயிகள் தங்கள் பகுதியில் உள்ள ஆற்றில் தடுப்பணை கட்ட வேண்டும் என்று கோரிக்கை விடுத்தனர். இதுதொடர்பாக வல்லுநர் குழு ஆய்வு செய்து, அரசுக்கு அறிக்கை அளிக்கும் என்று மாவட்ட ஆட்சியர் தெரிவித்தார்.

காட்டுப் பன்றிகளிடம் இருந்து பயிர்களைக் காப்பாற்றுவதற்காக அமைக்கப்பட்ட கம்பி வேலிகளை மின் துறையினர் அகற்றிவிடுவதாக விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

இதற்கு பதில் அளித்த ஆட்சியர் கஜலட்சுமி, மின்சாரம் பாய்ச்சாமல் விவசாயிகள் தங்கள் பாதுகாப்புக்கு கம்பி வேலிகளை அமைத்தால் அவற்றை மின் துறையினர் அப்புறப்படுத்தும்படி வலியுறுத்தக் கூடாது. ஆனால், கம்பி வேலியில் மின்சாரம் பாய்ச்சினால் நடவடிக்கை எடுக்கலாம் என்றார். இதையடுத்து, விவசாயம் தொடர்பான பல்வேறு பிரச்னைகள் விவாதிக்கப்பட்டன.

இந்தக் கூட்டத்தில், வேளாண்மைத் துறை இணை இயக்குநர் சீதாராமன், கூட்டுறவுத் துறை இணைப் பதிவாளர் பாஸ்கரன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (விவசாயம்) சந்திரன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் சுரேஷ் ஸ்ரீராம், கால்நடைத் துறை இணை இயக்குநர்

பன்னீர்செல்வம், வேளாண்மை பொறியியல் துறை பொறியாளர் சுப்பிரமணி உள்ளிட்ட அதிகாரிகள் பங்கேற்றனர்.

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## தமிழ்நாடு, புதுச்சேரியில் இன்று அநேக இடங்களில் மழை பெய்யும் அரபிக்கடலில் உருவான புயல் தீவிரம் அடைந்தது




சென்னை,

இலங்கை- கன்னியாகுமரி இடையே நிலவுகின்ற மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று(சனிக்கிழமை) அநேக இடங்களில் மழை பெய்யும் என்றும், அரபிக்கடலில் உருவான புயல் தீவிரம் அடைந்துள்ளது என்றும் வானிலை மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.வழக்கமாக வட கிழக்கு பருவமழை

தொடங்கியதும் வங்கக்கடலில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகுவதும் அதன் காரணமாக பலத்த மழைபெய்வதும் உண்டு. தமிழ்நாட்டில் கடந்த 28-ந்தேதி முதல் வடகிழக்கு பருவமழை பெய்து வருகிறது.

இன்றும் தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் அநேக இடங்களில் மழை பெய்யும் என்று வானிலை மையம் அறிவித்துள்ளது.அநேக இடங்களில் மழை பெய்யும்

இது குறித்து சென்னை வானிலை மண்டல ஆராய்ச்சி மைய இயக்குனர் எஸ்.ஆர்.ரமணன் கூறியதாவது:-

வங்கக்கடலில் இலங்கை அருகே நேற்று முன்தினம் மேலடுக்கு சுழற்சி இருந்தது. அதன் காரணமாக தமிழ்நாட்டில் அநேக இடங்களில் மழை பெய்துள்ளது. இலங்கை அருகே இருந்த மேலடுக்கு சுழற்சி, அங்கிருந்து மேற்கு நோக்கி நகர்ந்து கன்னியாகுமரி அருகே சென்றுள்ளது.

இந்த மேலடுக்கு சுழற்சி காரணமாக தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியில் இன்று (சனிக்கிழமை) அநேக இடங்களிலும், கடலோர தென் மாவட்டங்களிலும், உள் மாவட்டங்களிலும் ஓரிரு இடங்களில் கனமழை பெய்யும்.

தீவிரம் அடைந்த புயல்

அரபிக்கடலில் உருவான சபாலா என்ற புயல், தீவிரம் அடைந்து உள்ளது. அது நேற்று காலை 8-30 மணி நிலவரப்படி ஓமன் நாட்டில் உள்ள சலாலா நகருக்கு கிழக்கில் தென் கிழக்கில் 850 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ளது. அந்தப்புயல் மேலும் தீவிரம் அடைந்து அதி தீவிர புயலாகமாறலாம். அது நவம்பர் 2-ந்தேதி ஓமன் - ஏமன் நாடுகளுக்கு இடையே கரையை கடக்க வாய்ப்பு உள்ளது.இவ்வாறு எஸ்.ஆர்.ரமணன் தெரிவித்தார்.

நேற்று காலை 8-30 மணியுடன் முடிவடைந்த 24 மணி நேரத்தில் பெய்த மழை அளவு வருமாறு:-

பாபநாசம் 9 செ.மீ.

பாபநாசம் 9 செ.மீ., மகாபலிபுரம் 8 செ.மீ.,பூதப்பாண்டி 5 செ.மீ., சென்னை டி.ஜி.பி.அலுவலகம், செங்கோட்டை, மைலாடி தலா 4 செ.மீ., பாம்பன், அண்ணாபல்கலைக்கழகம், தாம்பரம் தலா 3 செ.மீ., சென்னை நுங்கம்பாக்கம், ராமேஸ்வரம், நாகப்பட்டினம், மயிலாடுதுறை, ஸ்ரீவைகுண்டம், தஞ்சாவூர், திண்டிவனம், நன்னிலம் தலா 2 செ.மீ. தென்காசி, மணிமுத்தாறு, சென்னை விமானநிலையம், காரைக்கால்,செங்குன்றம், திருவாலங்காடு, பரங்கிப்பேட்டை, ஆய்க்குடி, ஜெயங்கொண்டம், பெருங்கலூர், கந்தவர்கோட்டை, திருத்தணி, விளாத்திக்குளம், சிதம்பரம், தக்கலை, தாமரைப்பாக்கம், பூண்டி, திருத்துறைப்பூண்டி, முத்துப்பேட்டை, புள்ளம்பாடி, குழித்தலை, விருதுநகர் தலா 1 செ.மீ.மழை பெய்துள்ளது.

## 1-ந் தேதி துவரம் பருப்பு விற்பனை தொடங்குவதால் கூட்டுறவு அங்காடிகளுக்கு ஞாயிற்றுக்கிழமை விடுமுறை இல்லை



சென்னை,

நவம்பர் 1-ந் தேதி (ஞாயிற்றுக்கிழமை) கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தினால் நடத்தப்படும் பல்பொருள் விற்பனை அங்காடிகளுக்கு விடுமுறை அளிக்காமல் துவரம் பருப்பு விற்பனை நடத்தப்படும்.

பருப்பாக மாறும் துவரை

இந்தியா முழுவதும் திடீரென்று துவரம் பருப்பின் விலை பெருமளவில் உயர்ந்ததைத் தொடர்ந்து மக்கள் சிரமத்துக்கு ஆளானார்கள். இந்த சிரமத்தை குறைக்கும் வகையில் முதல்-அமைச்சர் ஜெயலலிதா துரித நடவடிக்கை எடுத்தார்.அதன்படி, மத்திய அரசிடம் இருந்து முதல் கட்டமாக 500 மெட்ரிக் டன் துவரையை தமிழக அரசு கோரியது. இந்தத் துவரை பெறப்பட்டு, அதை துவரம் பருப்பாக மாற்றும் நடவடிக்கைகள் நடத்தப்பட்டு பாக்கெட்டுகளில் அடைக்கப்படுகின்றன.

91 அங்காடிகள்

ஒரு கிலோ மற்றும் அரை கிலோ என்று இரண்டு வகை பாக்கெட்டுகளாக துவரம் பருப்பு அடைக்கப்படுகின்றன. அரை கிலோ துவரம் பருப்பு ரூ.55 என்றும், ஒரு கிலோ ரூ.110 என்று நவம்பர் 1-ந் தேதியில் (ஞாயிற்றுக்கிழமை) இருந்து விற்பனை செய்யப்படவுள்ளது. கூட்டுறவு பண்டக சாலைகள் மற்றும் தமிழ்நாடு நுகர்வோர் வாணிபக் கழகத்தினால் நடத்தப்படும் பல்பொருள் விற்பனை அங்காடிகள் மூலம் (சென்னை, கோவை, திருச்சி, மதுரையில் 91 அங்காடிகளில்) விற்பனை செய்யப்படவுள்ளன.

விடுமுறை கிடையாது

சிந்தாமணி, அமுதம் போன்ற கூட்டுறவு சங்க அங்காடிகள் 71-ம், டி.யு.சி.எஸ். அங்காடிகள் 20-ம் உள்ளன. கூட்டுறவு சங்க அங்காடிகளுக்கு ஞாயிற்றுக்கிழமைகளில் விடுமுறை அளிக்கப்பட்டு

வருகிறது. டி.யு.சி.எஸ். அங்காடிகள் முதல் இரண்டு வார ஞாயிற்றுக்கிழமைகளில் இயங்கும்.

துவரம் பருப்பு சிறப்பு விற்பனை தொடக்கம் நவம்பர் 1-ந் தேதி ஞாயிற்றுக்கிழமையில் நிகழ்வதால் அன்று கூட்டுறவுத் துறை நடத்தும் அங்காடிகளுக்கு விடுமுறை கிடையாது என்று கூட்டுறவுத் துறை உயர் அதிகாரி தெரிவித்தார். எனவே 91 கடைகளிலும் மக்கள் தங்குதடையில்லாமல் நவம்பர் 1-ந் தேதியன்றே சென்று துவரம் பருப்பை குறைந்த விலையில் வாங்கலாம்.

## பருப்பு உற்பத்தியை பெருக்க மலைக்கிராம விவசாயிகளுக்கு மானியம் வழங்கவேண்டும்: விவசாயிகள் கோரிக்கை



ஈரோடு

பருப்பு உற்பத்தியை பெருக்க மலை கிராம விவசாயிகளுக்கு மானியம் வழங்கவேண்டும் என்று வேளாண்மை குறைதீர்க்கும் கூட்டத்தில் விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

<u>வேளாண் குறைதீர்க்கும் கூட்டம்</u>

ஈரோடு மாவட்டத்தில் உள்ள விவசாயிகளின் குறைகளை கேட்கும் வகையில், மாவட்ட நிர்வாகத்தால் ஒவ்வொரு மாதமும் கடைசி வெள்ளிக்கிழமைகளில் வேளாண்மை குறைதீர்க்கும் நாள் கூட்டம்

நடத்தப்பட்டு வருகிறது. அதன்படி நேற்று மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில் வேளாண்மை குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடந்தது. கூட்டத்துக்கு மாவட்ட கலெக்டர் எஸ்.பிரபாகர் தலைமை தாங்கினார். ஈரோடு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும் வந்திருந்த விவசாயிகள் தங்களின் குறைகளை மனுக்களாக கலெக்டரிடம் கொடுத்தார்கள். அதைத்தொடர்ந்து விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம் தொடர்பான தங்களது பகுதி பிரச்சினைகள் குறித்து பேசினார்கள். அதன் விவரம் வருமாறு:–

தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் மூலம் விவசாய உபகரணங்கள் வாங்கப்பட்டு, மானிய விலையில் விவசாயிகளுக்கு வழங்கி வருகிறது. நமது மாவட்டத்தில் உள்ள விவசாயிகளுக்கு எந்த மாதிரியான கருவிகள் தேவைப்படுகிறதோ, அதை வாங்கிக்கொடுக்கவேண்டும். மாறாக தேவையில்லாத கருவிகளை தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்கள் வாங்கக்கூடாது. மேலும் அதிகாரிகள், விவசாயிகளிடம் கருத்து கேட்டு எந்த கருவிகளின் தேவை அதிகம் இருக்கிறதோ அதை வாங்கிக்கொடுக்கவேண்டும்.

<u>இலைப்புள்ளி நோய்</u>

விவசாயிகள் வங்கிகளில் கடன் கேட்டால் பழைய கடனை வட்டியுடன் திருப்பிக்கொடுத்தால் மட்டுமே புதிய கடன் வழங்கப்படும் என்று அதிகாரிகள் கூறி வருகிறார்கள். முறையாக வட்டி செலுத்துபவர்களுக்கு புதிய கடன் வழங்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் மஞ்சள் அதிக அளவில் பயிரிடப்பட்டு உள்ளது. தற்போது இந்த மஞ்சள் செடிகளில் இலைப்புள்ளி நோய் மற்றும் இலைக்கருகல் நோய் தாக்கி உள்ளது. அதனால் மஞ்சள் விளைச்சல் வெகுவாக பாதிக்கப்படும். எனவே இலைப்புள்ளி மற்றும் இலைக்கருகல் நோயுக்கு உரிய மருத்தினை வேளாண் அதிகாரிகள் பரிந்துறை செய்யவேண்டும்.

<u>செம்மாடை நோய்</u>

கருங்கல்பாளையம் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் மஞ்சள் மூட்டைகளை குடோனுக்கு வெளியில் அடுக்கி வைத்துள்ளனர். தற்போது மழைக்காலமாக இருப்பதால் அடியில் உள்ள மஞ்சள் மூட்டைகள் சேதம் அடைய வாய்ப்பு உள்ளது. எனவே அவற்றை பாதுகாப்பான முறையில் வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

கரும்பு விவசாயிகளுக்கு சர்க்கரை ஆலை வழங்கவேண்டிய நிலுவைத்தொகையை உடனடியாக வழங்கவேண்டும். தடப்பள்ளி – அரக்கன்கோட்டை பாசன பகுதியில் சுமார் 25 ஆயிரம் ஏக்கரில் நெல் பயிரிடப்பட்டு உள்ளது. பால் பிடிக்கும் தருவாயில் உள்ள நெல் பயிரில் தற்போது செம்மாடை என்னும் புதிய நோய் தாக்கி உள்ளது. இந்த நோயை கட்டுப்படுத்த இதுவரை எந்த ஒரு வேளாண் அதிகாரியும் சம்பந்தப்பட்ட இடத்துக்கு சென்று ஆய்வு செய்யவில்லை.

<u>பட்டாசு விற்பனை</u>

கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பட்டாசு விற்பனை செய்ய அதிகாரிகள் தீவிர நடவடிக்கை எடுத்து வருகிறார்கள்.

வேளாண் உற்பத்தி பொருட்கள் விற்பனை செய்யும் இடத்தில் பட்டாசு விற்பனை செய்யக்கூடாது. எனவே கோபி வேளாண் உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் பட்டாசு விற்பனை செய்ய தடைவிதிக்க வேண்டும்.

<u>கோழிப்பண்ணைகள்</u>

பெருந்துறை பகுதியில் 8 பெரிய கோழிப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பண்ணைகள் மூலம் 5 லட்சம் கோழிகள் வளர்க்கப்பட்டு வருகின்றன. இதேபோல் பவானியில் 4, கோபியில் 2, சத்தியமங்கலத்தில் 2 பெரிய கோழிப்பண்ணைகள் செயல்பட்டு வருகின்றன. இந்த பண்ணைகள் மூலம் சுற்றுபுற சுகாதார சீர்கேடு ஏற்படுகிறது. பவானிசாகர் அணை நீர் நிர்வாகம் காவிரி இறுதி தீர்ப்புப்படி நடத்தப்பட்டு வருகிறது என உச்சநீதிமன்ற வழக்கில்

தமிழ்நாடு அரசு தரப்பு ஒப்புதல் அளித்துள்ளது. இதை நீர் நிர்வாகம் பின்பற்றவேண்டும்.

சொட்டுநீர் பாசனத்துக்கு முறையாக மானியம் வழங்கவேண்டும். கடந்த 3 ஆண்டுகளாக எந்த ஒரு விவசாயியும் செட்டுநீர் பாசனத்தின் மூலம் பயன்பெறவில்லை. எனவே தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண்துறை இதற்கு தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டும். சிறு குறு விவசாயிகள் சான்றிதழ் பெற அதிகாரிகளுக்கு அதிக அளவில் லஞ்சம் கொடுக்கவேண்டி உள்ளது. இந்த சான்றிதழ் பெற ரூ.4 ஆயிரம் வரை செலவு ஆகிறது. எனவே ஆன்லைன் மூலம் சான்றிதழ் பெற நடவடிக்கை எடுக்கவேண்டும்.

காலிங்கராயன் வாய்க்கால்

சஞ்சீவிராயன் ஏரி, கீரிப்பள்ளம் ஓடை ஆகியவற்றை தூர்வார நடவடிக்கை எடுக்கவேண்டும். மேலும் அங்கு நகராட்சி கழிவுகள் கொட்டப்படுவது தடுக்கப்படவேண்டும். காலிங்கராயன் வாய்க்கால் பகுதிகளில் மஞ்சள், கரும்பு, நெல் போன்ற பயிர்கள் பயிரிடப்பட்டு உள்ளன. காலிங்கராயன் வாய்க்காலில் பழுதான மதகுகளை சரிசெய்ய மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

பருப்பு விலை

பருப்பு விலை தற்போது அதிக அளவில் உயர்ந்துள்ளது. அதனால் வெளிநாடுகளில் இருந்து பருப்பு இறக்குமதி செய்யப்பட்டு வருகிறது. நமது மாவட்டத்தில் அவரை, துவரை மற்றும் பருப்பு வகை பயிர்கள் மலைப்பகுதியில் பயிரிடப்பட்டு வருகின்றன. எனவே மலைக்கிராம விவசாயிகளுக்கு மானியம் வழங்கி பருப்பு உற்பத்தியை பெருக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மலைப்பகுதியில் உள்ளவர்கள் வைத்திருக்கும் ரேஷன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை போன்றவற்றில் வேறுவேறு பெயர்கள் உள்ளன. அதனால் அவர்கள் அரசின் நல உதவிகளை பெற முடிவதில்லை. படிப்பறிவு இல்லாததால் அவர்களால் தாசில்தார்

அலுவகத்திற்கு சென்று பெயர் மாற்ற முடியவில்லை. அதனால் அங்கு சிறப்பு முகாம்கள் நடத்தி அவர்களுக்கு ஒரே பெயர் கொண்ட ரேஷன் கார்டு, வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை கிடைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்.

இவ்வாறு விவசாய சங்க பிரதிநிதிகள் கூறினார்கள்.

லட்சம் கொடுக்காதீர்கள்

கலெக்டர் கூறும்போது, 'பட்டா மாறுதல் செய்யும் போது யாரும் அதிகாரிகளுக்கு லஞ்சம் கொடுக்காதீர்கள். ஒருசில நாட்கள் காத்திருங்கள். பின்னர் அவர்களாகவே பட்டா மாறுதல் செய்து கொடுப்பார்கள். லஞ்சம் கொடுத்து அவர்களை ஊக்கப்படுத்தாதீர்கள். ஆன்லைன் மூலம் பட்டா மாறுதல் பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது.

இதன் முதல் கட்டமாக வருகிற 1–ந் தேதி முதல் (ஞாயிற்றுக்கிழமை) பெருந்துறை தாலுகாவில் ஆன்லைன் விண்ணப்ப முறை நடைமுறைப்படுத்தப்பட உள்ளது. அதற்காக அங்குள்ள 5 சேவை மையங்களுக்கு முதல் கட்ட பயிற்சி அளிக்கப்பட்டு உள்ளது. வருகிற ஜனவரி மாதத்துக்குள் ஈரோடு மாவட்டத்தில் உள்ள அனைத்து தாலுகாவிலும் ஆன்லைன் மூலம் பட்டா மாறுதல் பெற விண்ணப்பிக்கலாம். ஈரோடு மாவட்டதில் நடப்பு ஆண்டில் விவசாயத்திற்காக கூட்டுறவு சங்கங்களின் மூலம் ரூ.233 கோடியே 69 லட்சம் வட்டியில்லா கடன் வழங்கப்பட்டு உள்ளது.' என்றார்.

## நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கில் கலெக்டர் ஆய்வு



நாகையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கில் கலெக்டர் பழனிசாமி ஆய்வு மேற்கொண்டார்.

கலெக்டர் ஆய்வு

நாகையில் உள்ள தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக சேமிப்பு கிடங்கினை கலெக்டர் பழனிசாமி நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார். அப்போது கிடங்கில் இருந்து நியாயவிலை கடைகளுக்கு அனுப்பப்படும் அத்தியாவசிய பொருட்களான பச்சரிசி, புழுங்கல் அரிசி, சர்க்கரை, கோதுமை, உளுந்தம் பருப்பு, துவரம் பருப்பு, பாமாயில் போன்றவற்றின் இருப்பு பதிவேட்டை சரிபார்த்து, எடை குறைவின்றி அனுப்பப்படுகிறதா என ஆய்வு மேற்கொண்டார்.

சத்துணவு மையங்களுக்கு அனுப்பப்படும் அயோடின் உப்பு தரமான முறையில் உள்ளதா என ஆய்வு செய்தார். அதனைத்தொடர்ந்து சிமெண்டு கிடங்கினை பார்வையிட்டு ஆய்வு செய்து, இறக்குமதி செய்யப்படும் சிமெண்டு மூட்டைகளின் எண்ணிக்கை, பசுமை வீடுகள் மற்றும் இந்திரா நினைவு குடியிருப்பு வீடுகளுக்கு வழங்கப்படும் சிமெண்டு மூட்டைகளின் எண்ணிக்கை, பொது பயனாளிகளுக்கு வீடு கட்டுமானப்பணிக்காக அனுப்பப்படும் சிமெண்டு மூட்டைகளின்

எண்ணிக்கை ஆகியவற்றை தனித்தனியே பதிவேடுகளில் பராமரிக்குமாறு அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

இந்த ஆய்வின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் ராதாகிருஷ்ணன், தரக்கட்டுப்பாட்டு அலுவலர் எழிலரசன், துணை மேலாளர் ராஜ்மோகன் மற்றும் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

## கம்பு விதை முளைக்காததால் விவசாயிக்கு ரூ.10ஆயிரம் இழப்பீடு மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவு




பெரம்பலூர்,

கம்பு விதை முளைக்காததால், அதனை விற்பனை செய்த கடைஉரிமையாளர், விவசாயிக்கு ரூ.10ஆயிரம் இழப்பீடு வழங்க வேண்டும் என்று மாவட்ட நுகர்வோர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

கம்பு விதை


அரியலூர் மாவட்டம் உடையார்பாளையத்தை சேர்ந்தவர் அந்தோணிசாமி (வயது 65). இவர் அரியலூரில் சின்னக்கடைதெருவில் அக்ரோ ஏஜென்சி நடத்தி வரும் சிவசண்முகம் என்பவரது கடையில் கடந்த 23.6.2010 அன்று ரூ.1,600 செலுத்தி, 4½ கிலோ கம்பு விதை வாங்கினார்.

வயலில் விதைத்த கம்புகள் பலநாட்களாகியும் சரிவர முளைக்கவில்லை. இதனால் பொருள் இழப்பு ஏற்பட்டதால், மனஉளைச்சலுக்கு ஆளான அந்தோணிசாமி பெரம்பலூர் மாவட்ட நுகர்வோர் நீதிமன்றத்தில் வழக்கறிஞர் மூலம் புகார் மனு தாக்கல் செய்து வழக்கு தொடர்ந்தார்.

இழப்பீடு

இந்த வழக்கை விசாரித்த மாவட்ட நுகர்வோர் மன்ற தலைவர் கலியமூர்த்தி, உறுப்பினர்கள் அன்பழகன், ஜெயலட்சுமி ஆகியோர் கொண்ட குழுவினர், மனஉளைச்சலுக்கு ஆளான அந்தோணிசாமிக்கு ரூ.10ஆயிரம் இழப்பீடு தொகையும், வழக்கு செலவிற்காக ரூ.3ஆயிரமும் மற்றும் கம்பு விதை வாங்கிய வகையில் அந்தோணிசாமி செலுத்திய ரூ.1600–ஐயும் 2 மாதத்திற்குள் சிவசண்முகம் வழங்கவேண்டும் என்றும் உத்தரவிட்டனர்.

## அரும்பாவூரில் 2 கன்றுகளை ஈன்ற பசுமாடு



அரும்பாவூர்,

அரும்பாவூரில் பசுமாடு ஒன்று 2 கன்றுகளை ஈன்றது.

விவசாயி

பெரம்பலூர் மாவட்டம், அரும்பாவூர் சனிமூலை தெருவைச் சேர்ந்தவர் துரைசாமி. விவசாயியான இவர் பசுமாடு ஒன்று வளர்த்து வருகிறார். இந்த மாடு சினையாக இருந்தது. இந்த மாட்டை இவர் தினமும்

மேயச்சலுக்கு அனுப்பி விட்டு மாலையில் கொட்டகையில் அடைப்பது வழக்கம்.

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் கொட்டகையில் அடைக்கப்பட்டு இருந்த பசுமாடு பிரசவ வேதனையால் சத்தமிட்டது. இதன் சத்தம்கேட்டு துரைசாமி கொட்டகைக்கு சென்று பார்த்தார். அப்போது, அந்த மாடு கன்று ஒன்றை ஈன்றது. சிறிது நேரத்தில் மற்றொரு கன்றையும் ஈன்றது.பொதுமக்கள் பார்த்தனர்

தனது பசுமாடு 2 கன்றுகளை ஈன்றதால் துரைசாமி மகிழ்ச்சி அடைந்தார். இது பற்றி அவர் அக்கம்பக்கத்தில் உள்ளவர்களிடம் தெரிவித்தார். இதனையடுத்து அப்பகுதி மக்கள் அந்த 2 கன்றுகளையும் ஆச்சரியமாக பார்த்து சென்றனர். தற்போது, 2 கன்றுகளும் ஆரோக்கியமாக உள்ளன. பெரும்பாலும் பசுமாடு ஒரு கன்றை தான் ஈனும், அதிசயமாக ஏதாவது ஒரு மாடுதான் 2 கன்றுகளை ஈனும் என்று கால்நடை மருத்துவர் ஒருவர் கூறினார்.

**83 ஆயிரம் எக்டேரில் சம்பா, தாளடி சாகுபடி கலெக்டர் சுப்பையன் தகவல்**



தஞ்சை மாவட்டத்தில் 83 ஆயிரம் எக்டேரில் சம்பா, தாளடி சாகுபடி செய்யப்பட்டுள்ளன என்று கலெக்டர் சுப்பையன் கூறினார்.

குறைதீர்க்கும் கூட்டம்

தஞ்சை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் கலெக்டர் சுப்பையன் தலைமையில் தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் நேற்று நடைபெற்றது. கூட்டத்தில் கலெக்டர் சுப்பையன் பேசியதாவது:-

தஞ்சை மாவட்டத்தில் நடப்பு ஆண்டு சம்பா மற்றும் தாளடி பருவத்திற்கு 1 லட்சத்து 38 ஆயிரத்து 500 எக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டு தற்போது வரை 83 ஆயிரத்து 210 எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. குறுவை சாகுபடி செய்யப்பட்ட 33 ஆயிரத்து 625 எக்டேரிலும் அறுவடை செய்யப்பட்டுள்ளது. சம்பா பருவத்திற்கு நாற்றங்கால் 4 ஆயிரத்து 850 எக்டேர் சாதாரண முறையிலும், 410 எக்டேர் பரப்பில் திருந்திய நெல் சாகுபடி முறையிலும் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் தேவையான அளவு விதைநெல், உரங்கள் இருப்பு வைக்கப்பட்டு வினியோகம் செய்யப்பட்டு வருகிறது. தோட்டக்கலைத்துறை சார்பில் நடப்பு ஆண்டிற்கு நெல்லி 275 எக்டேர் பரப்பளவில் விரிவாக்கம் செய்ய இலக்கு பெறப்பட்டு பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு வருகின்றனர். வேளாண்மை பொறியியல் துறை சார்பில் நில மேம்பாட்டு திட்டத்தின் அடிப்படையில் மண் தள்ளும் எந்திரம், உழவு எந்திரம், கதிர் அடிக்கும் எந்திரம், மண் அள்ளும் எந்திரம் போன்ற கருவிகள் வாடகைக்கு விடப்படுகிறது.

நெல் கொள்முதல்

நுகர்பொருள் வாணிப கழகம் சார்பில் நடப்பு பருவத்தில் இதுவரை 33 ஆயிரத்து 299 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தற்போது தஞ்சை மாவட்டத்தில் 118 நேரடி நெல் கொள்முதல்

நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. விவசாயிகளின் கோரிக்கைகளின் அடிப்படையில் அவ்வப்போது தேவைக்கு ஏற்ப நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்படுகிறது. கடந்த ஆண்டு 3 லட்சத்து 57 ஆயிரத்து 113 மெட்ரிக் டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் சார்பில் நடப்பு ஆண்டிற்கான நிர்ணயிக்கப்பட்ட விவசாய மின் இணைப்பு இலக்கீட்டில் இதுவரை 85 மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன. மீதமுள்ள இணைப்புகள் இந்த ஆண்டு வழங்கிட துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. சம்பா சாகுபடிக்காக 12 மணி நேரம் வரை மும்முனை மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது. தேவைக்கேற்ப கூடுதல் மின்மாற்றிகள் மற்றும் மின் கம்பிகளின் திறன் உயர்த்தி தரமான தடையில்லா மின்சாரம் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ரூ.112¾ கோடி கடன்

கால்நடை பராமரிப்புத்துறை சார்பில் 9-ம் சுற்று கோமாரிநோய் தடுப்பூசி திட்டத்தின் கீழ் 77 குழுக்கள் அமைக்கப்பட்டு 3 லட்சத்து 86 ஆயிரம் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடப்பட்டுள்ளன. கூட்டுறவுத்துறை சார்பில் நடப்பாண்டில் இதுவரை 30 ஆயிரத்து 731 விவசாயிகளுக்கு ரூ.112 கோடியே 72 லட்சத்து 79 ஆயிரம் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. குருங்குளம் அறிஞர் அண்ணா சர்க்கரை ஆலை நடப்பு ஆண்டு அரவை பருவத்திற்கு 22-10-2015 முடிய கரும்பு நடவு 3 ஆயிரத்து 976 ஏக்கர் மற்றும் மறுதாம்பு 7 ஆயிரத்து 357 ஏக்கர் ஆக மொத்தம் 11 ஆயிரத்து 333 ஏக்கர் பதிவு செய்யப்பட்டுள்ளது.இவ்வாறு அவர் கூறினார்.கூட்டத்தில் மாவட்ட வருவாய் அதிகாரி சந்திரசேகரன், மாவட்ட வேளாண்மை இணை இயக்குனர் ஞானஒளி, நுகர்பொருள் வாணிப கழக முதுநிலைமண்டல மேலாளர் மணிமாறன், கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் சுப்பிரமணியன், மின்பகிர்மான வட்ட

மேற்பார்வை பொறியாளர் அருள்மொழி மற்றும் அதிகாரிகள், விவசாயிகள் உள்பட பலர் கலந்துகொண்டனர்

**கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் 2–ம் போக நெல் சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரம்**



கம்பம்

கம்பம் பள்ளத்தாக்கு பகுதிகளில் 2–ம் போக நெல் சாகுபடி பணிகளில் விவசாயிகள் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

<u>நல்ல விளைச்சல்</u>

தேனி மாவட்டம் கம்பம் பள்ளத்தாக்கு என்பது லோயர்கேம்ப் பகுதியில் தொடங்கி பழனிசெட்டிபட்டி வரை உள்ளதாகும். இந்த பகுதியில் சுமார் 17 ஆயிரத்து 707 ஏக்கர் நிலப்பரப்பில் இரு போகம் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. இதன்படி முதல்போக சாகுபடி பணிகள் கடந்த

ஜூன் மாதம் முதல் வாரத்தில் தொடங்கியது. இதற்காக முல்லைப்பெரியாறு அணையில் இருந்து தண்ணீர் திறக்கப்பட்டது.

இந்த முதல் போகத்தில் நெற்பயிர் நல்ல விளைச்சல் அடைந்துள்ளது. அதன்படி கம்பம், கூடலூர், கருநாக்கமுத்தன்பட்டி, சுருளிப்பட்டி, காமயகவுண்டன்பட்டி, ராயப்பன்பட்டி, கோகிலாபுரம், சின்னமனூர், மார்க்கையன்கோட்டை உள்ளிட்ட பகுதிகளில் தற்போது அறுவடை பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

இதற்கிடையே இந்த பகுதிகளில் உள்ள விவசாயிகள் முதல் போகத்திற்கு நாற்று நடவு செய்யும் போது தங்கள் விவசாய நிலத்தில் ஒரு சிறு பகுதியை மட்டும் காலியாக விடுவார்கள். அதில் நெற்பயிர்களை அறுவடை செய்யும் பணிகளை தொடங்குவதற்கு குறிப்பிட்ட நாட்களுக்கு முன்பாக 2–ம் போக சாகுபடிக்காக நாற்றுக்களை உருவாக்குவார்கள்.

<u>அறுவடை பணிகள்</u>

அதன்படி அவர்கள் உருவாக்கிய நாற்றுகள் தற்போது நடவு செய்வதற்கு தயார் நிலையில் உள்ளன. இதையடுத்து 2–ம் போக நெல் சாகுபடி பணிகள் விவசாயிகள் தீவிரம் அடைந்துள்ளனர். தற்போது அறுவடை முடிந்துள்ள நிலையில் சில இடங்களில் நிலத்தை உழவு செய்ய தொடங்கி உள்ளனர். பின்னர் நிலத்தில் தண்ணீர் பாய்ச்சி தொழி உழவு முடிந்த பிறகு நாற்றுகளை நடவு செய்யும் வேலைகள் சில நாட்களில் தொடங்கப்படும் என்று தெரிகிறது.

இதற்கிடையே கம்பம் பள்ளத்தாக்கு பகுதியில் உள்ள வீரபாண்டி, கோட்டூர், பழனிசெட்டிபட்டி ஆகிய பகுதிகளில் தற்போது தான் நெற்கதிர்களை அறுவடை செய்யும் பணிகள் தொடங்கி உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில், கலெக்டர் எச்சரிக்கை "அதிக விலைக்கு உரங்கள், விதைகள் விற்றால் நடவடிக்கை எடுக்கப்படும்"**




நெல்லை,

அதிக விலைக்கு உரங்கள், விதைகள் விற்றால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டத்தில் கலெக்டர் மு.கருணாகரன் தெரிவித்தார்.

<u>விவசாயிகள் குறைதீர்க்கும் நாள்</u>

நெல்லை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் கலெக்டர் அலுவலக வளர்ச்சி மன்ற கூட்ட அரங்கில் நேற்று நடந்தது.

கலெக்டர் மு.கருணாகரன் தலைமை தாங்கினார். மாவட்ட வருவாய் அலுவலர் ம.க.குழந்தைவேல், வேளாண்மைத்துறை இணை இயக்குனர் பெருமாள், கலெக்டரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) து.வெங்கடகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் நடந்த விவாதம் வருமாறு:–

நிவாரண தொகை

கலெக்டர் மு.கருணாகரன்:– நெல்லை மாவட்டத்தில், 2014–ம் ஆண்டு வடகிழக்குப் பருவமழை காலத்தில் 50 சதவீதத்திற்கு மேல் பயிர்ச்சேதம் ஏற்பட்டு விவசாயிகள் பாதிக்கப்பட்டனர். அதாவது 989.90.71 எக்டேர் பரப்பளவில் பயிரிடப்பட்ட பயிர்களுக்கு மாநில பேரிடர் நிவாரண நிதியிலிருந்து மொத்தம் ரூ.96 லட்சத்து 90 ஆயிரத்து 612 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விரைவில், பாதிக்கப்பட்ட பயிர்ச்சேதங்களுக்கான நிவாரணத்தொகை சம்பந்தப்பட்ட விவசாயிகளுக்கு வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களின் மூலமாக வழங்கிட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

கசமுத்து:– நெல் நடவு செய்வதற்கு 3 இயந்திரங்கள்தான் உள்ளன. கூடுதலாக நெல் நடவு இயந்திரங்கள் வாங்கவேண்டும். நெல்லை மாவட்டத்தில் விவசாய பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகிறது. இந்த நேரத்தில் உரக்கடைகளில் உரங்கள், விதைகள் அதிக விலைக்கு விற்பனை செய்யப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். அம்பை பகுதியில் நெல் கொள்முதல் நிலையம் மற்றும் அரசு சார்பில் நவீன அரிசி ஆலை அமைக்க வேண்டும்.

கலெக்டர்:– கூட்டுறவு தொடக்க வேளாண்மை வங்கிகளில் மூலம் உரங்கள், விதைகள் வாங்கவேண்டும். அதிகவிலைக்கு உரம் விற்பனை செய்யும் கடைக்காரர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும்.

வேலுமயில்:– நெல்லை மாவட்டத்தில் நெல் அறுவடை காலத்தில் தனியார் அறுவடை இயந்திரத்திற்கு அதிக கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாதிக்கப்படுகிறார்கள். எனவே அறுவடை இயந்திரத்திற்கு அரசு விலை நிர்ணயம்

செய்யவேண்டும். நிரந்த நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கவேண்டும். நெல்லை கால்வாய், பாளையங் கால்வாய், கோடகன் கால்வாய் ஆகியவற்றில் சிமெண்டு தளம் அமைக்கவேண்டும். கூட்டுறவு கடன் சங்கங்களில் பயிர்க்கடன் வாங்கும் விவசாயிகளிடம் நிலத்தை அடமானம் கேட்பதை நிறுத்த வேண்டும்.

சேக்மைதீன்:— நெல்லை மாவட்டத்தில் பருவமழை பெய்து வருவதால், மானாவாரி நிலங்களில் தட்டைபயிறு, துவரை, காணம் உள்ளிட்ட பயிர்கள் விவசாயம் செய்ய உள்ளனர். எனவே விவசாயிகளுக்கு பயிறு விதைகளுக்கு மானியம் வழங்கவேண்டும். வாழைகளுக்கும் மானியம் வழங்கவேண்டும்.

மருதையா:—ஆட்கொண்டார்குளம் தொடக்கவேளாண்மை கூட்டுறவு சங்கத்தில் வறட்சி நிவாரணம் வழங்கியதில் முறைகேடுகள் நடந்து உள்ளன. நிர்வாக குழு உறுப்பினரான என்னை கூட்டத்தில் கலந்து கொள்ள அனுமதிக்கவில்லை. அங்கு நடைபெறும் முறைகேடுகள் குறித்து உரிய விசாரணை நடத்தி நடவடிக்கை எடுக்கவேண்டும், என்று கூறி கலெக்டரிடம் மனு கொடுத்தார்.

கசமுத்து:— தொடக்க வேளாண்மை சங்கத்தில் உள்ள மருதையாவை நிர்வாக குழு கூட்டத்தில் கலந்து கொள்ளச் செய்வதற்கு கலெக்டர் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும். அவருக்கு போலீஸ் பாதுகாப்பு வழங்கவேண்டும்.

கலெக்டர்:— கூட்டுறவுத்துறை அதிகாரிகள் இது குறித்து விசாரணை நடத்தி நடவடிக்கை எடுப்பார்கள்.

இவ்வாறு கூட்டத்தில் விவாதம் நடந்தது.

<u>ராசிங்கபேரி கண்மாய்</u>

சிவகிரி தாலுகாவிற்கு உட்பட்ட ராசிங்கபேரி கண்மாய் நீரினை பயன்படுத்துவோர் சங்க தலைவர் பூமிநாதன், கலெக்டரிடம் ஒரு மனு கொடுத்தார். அந்த மனுவில், மேற்கு தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகி வரும் பாலாற்று தண்ணீர் தலையணையில் இரண்டாக பிரிந்து ராசிங்கபேரி ஆற்றின் வழியாக ராசிங்கபேரி குளத்திற்கு செல்கிறது. எந்த இடத்திலும் தண்ணீரை பிரிப்பதற்கு ஆதாரங்கள் எதுவும் இல்லை. பிரிவினை இல்லாமல் நேரடியாக ராசிங்கபேரி குளத்திற்கு தண்ணீர் வரவேண்டும் என்று கோர்ட்டு, பொதுப்பணித்துறை உத்தரவு உள்ளது. எனவே தற்போது உள்ள விதிப்படியே குளத்திற்கு தண்ணீர் வருவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும், என்று கூறி உள்ளனர்.

<u>சுழற்கலப்பைகள்</u>

கூட்டத்தில், டிராக்டர்கள் மற்றும் விவசாய கருவிகளை மானிய விலையில் 29 பேருக்கு, கலெக்டர் வழங்கினார்.

வேளாண்மைத்துறையின் சார்பில் தேசிய உணவுப்பாதுகாப்புத் திட்டத்தின் கீழ், 14 விவசாயிகளுக்கு தலா ரூ.35 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.4 லட்சத்து 90 ஆயிரம் மானியத்தில் சுழற் கலப்பைகளையும், தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 12 விவசாயிகளுக்கு மொத்தம் ரூ.8 லட்சத்து 55 ஆயிரம் மானியத்தில் விசை உழுவை இயந்திரங்களையும், மேற்குத் தொடர்ச்சி மலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஒருங்கிணைந்த பண்ணை செயல் விளக்கம் அமைப்பதற்காக சங்கரன்கோவில் தாலுகா கீழக்களப்பாகுளம் கிராமத்தைச் சேர்ந்த வேலுச்சாமி என்பவருக்கு ரூ.99 ஆயிரத்திற்கான காசோலையும் வழங்கப்பட்டது.

தோட்டக்கலைத்துறையின் சார்பாக தேசிய தோட்டக்கலைத் திட்டத்தின் கீழ் 3 பேருக்கு தலா ரூ.75 ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.2 லட்சத்து 25 ஆயிரம் மானியத்தில் சிறு டிராக்டர்களையும், 3 பேருக்கு தலா ரூ.40

ஆயிரம் வீதம் மொத்தம் ரூ.1 லட்சத்து 20 ஆயிரம் மானியத்தில் பவர் டிரில்லர் இயந்திரங்களையும் கலெக்டர் வழங்கினார்.

வனத்துறையின் சார்பாக, வன விலங்குகளினால் ஏற்பட்ட பயிர்ச் சேதங்களுக்கு நிவாரணத் தொகையாக இரண்டு விவசாயிகளுக்கு ரூ.23 ஆயிரத்து 400–க்கான காசோலைகளையும் கலெக்டர் மு.கருணாகரன் வழங்கினார்.

**தூத்துக்குடி மீன்வள கல்லூரியில் மீன் கழிவில் இருந்து உரம் தயாரிக்கும் பயிற்சி**




தூத்துக்குடி,

தமிழ்நாடு மீன்வள பல்கலைக்கழகத்தின் அங்கமான மீன்வள கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில், மீன் கழிவுகளில் இருந்து உரம் தயாரிக்கும் பயிற்சி நடந்தது. இந்த பயிற்சி 3 நாட்கள் நடந்தது. கல்லூரி முதல்வர் அ.சீனிவாசன் தலைமை தாங்கினார். திட்ட ஒருங்கிணைப்பாளர் பத்மாவதி வரவேற்றார்.பயிற்சியில், மீன் பதன தொழில்நுட்ப துறை பேராசிரியர் வேலாயுதம், மீன் கழிவுகளை மறுசுழற்றி செய்து, உரமாக மாற்றும் முறை பற்றி பேசினார். கல்லூரி முதல்வர் சீனிவாசன், மீன் கழிவுகளை மறுசுழற்றி செய்வதன் முக்கியத்துவத்தையும், நல்ல உரம் தயார் செய்து, தோட்டப்பயிர்களுக்கும் மீன்வளர்ப்புக்கு பயன்படுத்துவது பற்றி பேசினார்.இந்த பயிற்சியில் தூத்துக்குடி மற்றும் சுற்றுவட்டார பகுதியில் இருந்து 27 பயிற்சியாளர்கள் கலந்து கொண்டனர். பயிற்சியாளர்களுக்கு மீன் கழிவுகளில் இருந்து உரம் தயாரிப்பதற்கான பயிற்சி கையேடும் வழங்கப்பட்டது. முடிவில் உதவி பேராசிரியர் சா.ஆனந்த் நன்றி கூறினார்.